

Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 35 இதழ் - 4 மே - 2022

தனிப்பிரதி
ரூ.10/-



**15.5.2022 ஞாயிறு திருவள்ளூர் பகுதியில் நடத்த இலவச மருத்துவ முகாமின் போது...**





## ஆசானின் அறிவுரையிலே ...


| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| பிசாசுகளைத் துரத்துதல் | 11 |
| பெண்கள் பகுதி | 14 |
| வாலிபர் பகுதி | 17 |
| சிறுவர் பகுதி | 20 |
| கேள்வி பிறப்பது நன்மையே | 22 |
| மனச்சோர்வும் மனமடிவும் | 26 |
| ஒரு மணவாட்டி தன் மண .... | 29 |
| வாழ்க்கையின் சாராம்சம்.... | 32 |


- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தைக் கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு தெரியப்படுத்தவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தை தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 35 May - 2022 Issue - 5


ஆசிரியர் உரை

## இங்கே ஒரு பையன் இருக்கிறான்!

ஆதியிலே ஆதாமையும், ஏவாளையும் தன் அளவற்ற வல்லமையால் உருவாக்கித் தமது சாயலில் படைத்த தேவன் அவர்களை ஆசீர்வதித்துச் சொன்னவைகளில் ஒன்று, **நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள்** என்பது [ஆதி.1:28] ஆனால், ஏதேன் தோட்டம் தொடங்கி தேவச் சத்தத்தையும், தேவச் சித்தத்தையும் தொடர்ந்து சீர்குலைத்து வரும் மானிடம், தேவ கோபத்தால் நோவாவின் நாட்களில் ஏற்பட்ட பெருவெள்ள அழிவிலிருந்தும் பாடம் கற்றுக்கொள்ளப் பிடிவாதமாக மறுத்து, ஒரு கட்டத்தில் தேவத் திட்டத்திற்குச் சவால் விடுகின்ற துணிகரச் செயலில் இறங்கியது. ஆம், சிநேயர் தேசத்துச் சமபூமியில் அவர்கள் சுகமாய்த் தங்கியிருந்த போது, **பலுகிப் பெருகி பூமியை நிரப்பு வதற்குப் பதிலாக, நாம் பூமியின் மீதெங்கும் சிதறிப் போகாதபடிக்கு நமக்கு ஒரு நகரத்தையும், வானத்தை அளாவும் ஒரு கோபுரத்தையும் கட்டி நமக்குப் பேர் உண்டாக்குவோம் வாருங்கள்** என்று சொல்லிக் கொண்டார்கள். சர்வ வல்லவரின் திட்டத்தைக் கையாலாகாத மனிதன் காலின் கீழ்போட்டு மிதிப்பதை தேவன் வேடிக்கை பார்ப்பாரா?

பூமியெங்கும் அதுவரை ஏகமாய் இருந்த பேசும் மொழியைத் தேவன் தாறுமாறாக்கினார். அவர்களின் கலக மனப்பான்மைக்குச் சுடச்சுடத் தண்டனை கிடைத்தது. தாங்கள் செய்ய நினைப்பது தடைபடாது என்ற அவர்கள் எண்ணத்தில் மண் விழுந்தது. ஒருவர் பேசுவதை மற்றொருவர் அறியாதபடிக்கு, அங்கே அவர்கள் மொழியைத் தாறுமாறாக்கினார் [அதி 11:8] அதினிமித்தம். தாங்கள் பேச நேர்ந்த மொழிக்கு ஏற்ப பூமியெங்கும் சிதறிப் போனார்கள். இன்று உலகமெங்கும் பேசப்படும் 7000க்கும் அதிகமான மொழிகளுக்கான அடிப்படை இதுதான்.

பாபேல் கோபுரக் கேட்டால் தோன்றிய தொன்மை மொழிகளில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டிருப்பது நம் தாய்மொழித் தமிழ். ஆளுமை நிறைந்த உலக மொழிகள் ஒவ்வொன்றிலும் மானிட பருவத்தின் ஒவ்வொரு நிலையைக் குறிப்பதற்கு வேறுபட்ட வார்த்தைகள் பயன்பாட்டில் உண்டு. எம்மொழிக்கும் சளைக்காத நம் மொழியிலும் இதற்குக் குறையேதும் இல்லை. நாம் நம் பேச்சு வழக்கில் **பையன்** என்னும் வார்த்தையைத் தேவைக்கேற்ப பயன்படுத்துகிறோம். இப்பதம் குழந்தைப் பருவத்துக்கும், வாலிபப்பருவத்துக்கும் இடையே உள்ள ஒரு பருவத்துக்கானது. கிட்டத்தட்ட இது ஒரு விளையாட்டுப் பருவம். அப்பாவித்தனமும், அறிவுத்தனமும் இணையும் ஒரு பருவம். இப்பருவம் சார்ந்த **ஒரு பையன்** பற்றி நாம் நம் இரட்சகர் இயேசு நடப்பித்த அற்புதச் சம்பவங்கள் ஒன்றில் காணமுடியும். [யோவான் 6:9]. விளையாட்டுப் பருவம் சார்ந்த இந்தப் பையனை நாம் கிட்டப்போய் பார்க்கும்போது, இவன் செயல்பாடுகள் நம்மை வியக்க வைக்கிறது.

சரி, இவன் பற்றி நாம் கூடுதலாகத் தெரிந்துகொள்ள நமது வழக்கத்தின்படியாக, இதன் பின்னணித் தகவல்களுக்குள்ளாகக் கடந்து வந்து விடுவோம்.

இரட்சகர் இயேசுவானவர் தம் சீடர்களுக்கு முன்பாக அநேக அற்புதங்கள் செய்திருந்தாலும் [யோவான் 20:30], பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டுப் பரிசுத்த எழுத்துக்களில் இடம் பெற்றிருப்பவை வெறும் 37 மட்டுமே. அவைகளுள் ஒன்று நம்மில் அநேகர் அறிந்து வைத்திருக்கும் **ஐந்து அப்பங்கள் மற்றும் இரண்டு மீன்கள் அற்புதம்.** புதிய ஏற்பாட்டில் **நான்கு நற்செய்தி நூல்களிலும்** இடம் பெற்றிருக்கும் ஒரே அற்புத சம்பவம் இதுதான். இது தவிர்த்து, நான்கு நற்செய்தி நூல்களிலும் இடம் பெற்றிருப்பது **இயேசு ஆண்டவரின் சிலுவைக் காரியங்கள்.** ஏனோ இந்த அற்புதத்திற்குத் தேவன் இவ்வளவு முக்கியத்துவம் தந்துள்ளார். இன்னும், எழுதப்பட்டுள்ள அற்புத சம்பவங்களைக் காலக்கிரம வரிசையில் பார்க்கும்போது இது அற்புதங்களின் நடுநாயகமாக உள்ளது. இதற்கு முன் 18 அற்புதங்கள் மற்றும் இதற்குப்பின் 18 அற்புதங்கள் என்று.

தம்முடைய இப்பூவுலக ஊழியத்தின் ஒரு கட்டத்தில் கலிலேயாக் கடலின் அக்கரைக்கு இயேசு போனார். அவர் ஏற்கனவே நடப்பித்த பதினெட்டு அற்புதங்களின் விளைவாக திரளான ஜனங்கள் அவருக்குப்பின் சென்றார்கள். இயேசு அங்கிருந்த மலை ஒன்றின் மீது ஏறித் தம்முடைய சீடருடனே உட்கார்ந்தபோது, தம் இடம்

நோக்கித் திரளான மக்கள் வருவதைக் கண்டு, சீடர்களில் ஒருவனாகிய பிலிப்புவை நோக்கி: **இவர்கள் சாப்பிடத்தக்கதாக அப்பங்களை எங்கே கொள்ளலாம்** என்று கேட்டார் (யோவான் 6:1-4). அற்புதங்கள் பல கண்ட பிலிப்பு இயேசுவின் இக்கேள்விக்கு முட்டை மதிப்பெண் பெற்று இயேசு வைத்த சோதனையில் மோசமாகத் தோற்றுப் போனான். இவ்வளவு காலம் இவன் இயேசுவோடிருந்து எந்த நன்மையும் இல்லை. இப்படித்தான் நம்மில் அநேகர் இன்றைக்கும் இருக்கிறோமோ?

ஆனால், இந்த இடத்தில் சத்தமில்லாமல் காய் நகர்த்துவதில் சாமர்த்தியசாலியான **அந்திரேயா** வலிய வந்து தன்னைக் காட்சியில் இணைத்துக் கொள்கிறான். சரியான நேரத்தில் மிகச் சரியானதைச் பேசுவதும், செய்வதும் இவனுக்குக் கைவந்தகலை. பின்னாளில் ஒரு பெரும் தேவ ஊழியனாகப் பேதுரு அப்போஸ்தலன் பரிமளித்ததற்கு வித்திட்டவன் இவன்தான். **ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை , வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்கு சமானம்** (**நீதி**. 25:11) என்ற வார்த்தைக்கு இவன் இலக்கணமாகத் திகழ்ந்துள்ளான். **மேசியாவைக் கண்டோம்** என்ற இவன் வசீகர வார்த்தைகள் தான் பேதுருவை இயேசுவண்டை இழுத்து வந்தது. இந்த அந்திரேயாதான் **இங்கே ஒரு பையன் இருக்கிறான்.** அவன் கையில் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும், இரண்டு மீன்களும் உண்டு என்றான் ( யோவான் 6:9) ஒரு வேளை இத்தனை ஜனங்களுக்கு எம்மாத்திரம் என்று கூடவே இவன் கூறியிருந்தாலும், இதைத் தாண்டி இயேசுவின் வல்லமையில் அவன் நம்பிக்கை கொண்டிருந்தான் என்றே தெரிகிறது.

சரி, இந்த அற்புத சம்பவத்தை நமது வழக்கமான பார்வை கொண்டு பார்க்கலாம், இந்தப் பையனை முதன்மைப்படுத்தி, இந்த விளையாட்டுப் பிள்ளை நம் பக்தி வாழ்வுக்கு என்ன பாடங்கள் கற்றுக் கொடுக்கிறான் என்று பார்ப்போம். இந்தப் பையன் பற்றிப் பை பையாகவும், மூட்டை மூட்டையாகவும் எழுதுவதற்கு நமக்குப் பெரிதாக தடயங்கள் கிடைக்காவிட்டாலும், நாம் அண்ணாந்து பார்த்து மலைத்து நிற்கும்படியான செயல்பாடு கொண்டவனாக இவன் இருந்துள்ளான் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆகவே, இந்த விளையாட்டுப் பருவ ஆசிரியர் நமக்கு என்ன பாடங்கள் கற்றுத் தருகிறார் என்று இப்பொழுது பார்ப்போம்.

### I தேவ வார்த்தையில் ஆர்வம் உடையவனாக இருந்தான்

இந்த விளையாட்டுப் பருவ ஆசிரியர் நமக்குக் கற்றுக் கொடுக்கும் முதல் பாடம், நாம் தேவனுடைய வார்த்தைகளில் ஆர்வமுள்ளவர் களாய் இருக்க வேண்டும் என்பது.

வேத வசனங்களில் தேவ மனிதர்களுக்கு ஆர்வம் இருக்க வேண்டுமென்று ஆவியில் ஏவப்பட்ட பல வேத தாசர்கள் நமக்கு எழுதிக் கொடுத்துள்ளனர். அப்படியிருந்தும் நாம் இது குறித்து மெத்தனமாக இருக்கும்போது, இவன் விளையாட்டுப் பருவத் திலேயே இயல்பான ஆர்வம் வேத வாக்கியங்களில் கொண்டவனாக இருந்துள்ளான்! ஆம், இயேசுவின் வாயிலிருந்து புறப்படும் வல்லமையின் வார்த்தைகளைக் கேட்பதற்கு திரள் கூட்டத்தில் ஒருவனாகத் தன்னையும் இணைத்துக் கொண்டான். இச்சம்பவம் பற்றி மத்தேயு ஆசிரியர் இவ்விதம் எழுதுகிறார். **சாயங்காலமான போது, அவருடைய சீடர்கள் அவரிடத்தில் வந்து: இது வனாந்திரமான இடம் நேரமுமாயிற்று....** என்றார்கள் [ மத். 14:15]. இவன் பெற்றோருடன் வந்ததாகத் தெரியவில்லை. பொதுவாகக் குடியிருப்புப் பகுதியிலிருந்து தூரமான இடத்தில் தான் வனாந்திரப் பகுதி இருக்கும். இந்த விளையாட்டுப் பருவப் பையன் தூரம் கருதாமல் இயேசுவின் வார்த்தைகளுக்காக கூட்டத்தோடு கூட்டமாக நடந்து சென்று ள்ளான். பெற்றோர் இல்லாமல் தொலை தூரம் செல்லும் பிள்ளைகள் இருட்டாகும் வேளை வந்தால் வீட்டிற்கு ஓடி வந்து விடுவார்கள். ஆனால், இவனோ மாலை மங்குவது கூடத் தெரியாமல் இயேசுவின் வார்த்தைகளில் மயங்கி இருந்துள்ளான் **நீதியின் மேல் பசி, தாகம் உள்ளவர்கள் பாக்கிவான்கள்** என்ற வசனத்திற்கு அறியாப் பருவத்திலேயே அர்த்தம் கற்பித்துள்ளானே!

இதன் மூலம் எவ்வித அடையாளமும் இல்லாத இந்தப் பையன், ஒரு வகையில் வேதாகமத்தில் உள்ள பக்குவப்பட்ட தேவ மனிதர்களுக்குத் தன்னை இணையாக்கிக் கொண்டுவிட்டானே! எரேமியா தீர்க்கன் இவ்விதம் கூறுகிறார். **உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவை களை உட்கொண்டேன்; உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது** என்று [எரே 15:16]. மேலும், **முதல் புறவினக் கிறிஸ்தவன்** என்ற மேன்மைக்குச் சொந்தமான கொர்நெலியு, **தேவனாலே உமக்குக் கட்டளையிடப்பட்ட யாவையும் கேட்கும்படிக்கு நாங்கள்ச எல்லாரும் இப்பொழுது இங்கே தேவ சமூகத்தில் கூடியிருக்கிறோம்** என்றான் [அப். 10:33]. இன்னும், புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்துவின் சபைகளில் வேத வசனங்களைக் கேட்பதற்கு எடுத்துக்காட்டாய் விளங்கின பெரோயர் பற்றி இவ்விதம் வாசிக்க முடியும். **அந்த பட்டணத்தார் மனோவாஞ்சையாய் தேவ** வசனத்தை ஏற்றுக் கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தார்கள் [அப். 17:11] என்று. இவர்களைப் போன்ற உத்தம இருதயம் அந்த விளையாட்டுப் பருவத்திலேயே இவனுக்குள்ளாக இருந்துள்ளது ஆச்சரியமாக இல்லையா?

அருமையானவர்களே! நாம் எப்படிப்பட்டவர்களாக உள்ளோம்? வேத வசனங்களின்பால் நம் ஆர்வம் எந்த அளவில் உள்ளது? **வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டு** என்றல்லவா வாசிக்கிறோம். [யோவான் 5:39]. எரேமியா, கொர்நெலியு, பெரோயா பட்டணத்தார் போலில்லாவிட்டால் கூட இந்த விளையாட்டுப் பையன் போல் இருக்க வேண்டும் தானே. ஆனால், யதார்த்தத்தில் நாம் எப்படி உள்ளோம்? நம் குறைகளைத் திருத்தி, வேத வாக்கியங்களில், கிறிஸ்துவின் வார்த்தைகளில் நாட்டம் கொண்டு, இந்தப் பையனின் சிந்தை கொண்டு நித்திய ஜீவனைச் சொந்தமாக்கிக் கொள்ள முழு முயற்சி எடுப்போம்.

## II. **ஆயத்த மனநிலை கொண்டவனாய் இருந்தான்**

இந்த விளையாட்டுப் பருவ ஆசிரியர் நமக்குக் கற்றுக் கொடுக்கும் இரண்டாம் பாடம், தேவக்காரியங்கள் சம்பந்தமாக எப்பொழுதும் ஆயத்தமுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பது.

நம்முடைய பக்திக் காரியங்களில் நாம் எப்பொழுதும் ஆயத்தமுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று தேவன் பல இடங்களில் வெளிப்படுத்தியுள்ளார். பழைய ஏற்பாட்டின் ஆமோஸ் தீர்க்கன், **உன் தேவனைச் சந்திக்க ஆயத்தப்படு** என்று எச்சரிப்பு கலந்த தொனியில் பேசியுள்ளான் [ஆமோஸ். 4:12]. இயேசு ஆண்டவர் ஆயத்தம் எவ்வளவு அவசியம் என்பதை நாம் எப்படியாகிலும் அறிந்து கொள்ள வேண்டுமென்று அடுத்தடுத்து **மூன்று** உதாரணங்களை தன் ஊழியத்தின் இறுதி நாட்களில் முன்னிறுத்தினார். **நோவா காலத்துச் சம்பவம், எஜமான் மற்றும் ஊழியக்காரன்** மற்றும் **பத்துக் கன்னிகைகள்.** [மத்.24:3625:1–13]. இம்மூன்றும் ஆயத்தம் சம்பந்தமாகவே பேசுகிறது. இவைகளில் பத்துக் கன்னிகைகள் உவமை நாம் எல்லோரும் அறிந்த ஒன்று. இந்த உவமையில் அறை குறை ஆயத்தத்தால் பயனேதும் இல்லை, முழுமையான ஆயத்தம் இருந்தால் தான் மணவாளனோடு கலியாண வீட்டுக்குள் பிரவேசிக்க முடியும் என்று அழுந்தக் கூறியுள்ளார்.

இப்போதனைகளையெல்லாம் நாம் அனைவரும் தேவைக்கும் அதிகமாகவே அறிந்திருக்கிறோம். ஆனால், இந்தப் பையனுக்கு ஆயத்தம் சம்பந்தமான போதனைகள் எதுவும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஆனாலும், அவன் முழு ஆயத்தத்தோடு இயேசுவின் வார்த்தைகளைக் கேட்கும்படி வந்துள்ளான் என்றே தெரிகிறது. எப்படியெனில், அவர் தனக்கான உணவைத் தன்னோடு கொண்டு வந்திருந்தான். குறைந்தது 5000 புருஷர்கள் அங்கே வந்துள்ளார்களே. ஒருவரும் தங்களோடு ஆகாரம் கொண்டு வந்ததாகத் தெரியவில்லை. அட, ஆண்களை விடுங்கள். என்ன ஆச்சு இந்தப் பெண்களுக்கு? ஒருவருக்கும் இதுபற்றி எண்ணம் வரவில்லையே! ஆச்சரியமாக இல்லையா? ஒருவேளை இவன் படுக்கப் பாயும் கொண்டு போயிருப்பானோ? யாருக்குத் தெரியும்?

அன்பானவர்களே! இயேசுவின் வார்த்தைகள் சம்பந்தமாகவும், இயேசுவின் இரண்டாம் வருகை சம்பந்தமாகவும் நம்முடைய ஆயத்தம் எப்படியுள்ளது? புதிய ஏற்பாட்டின் கடைசி நூலாகிய வெளிப்படுத்தல் இறுதி அதிகாரத்தின் இரண்டு இடங்களில், **இதோ சீக்கிரமாய் வருகிறேன்** என்றும் (22:7), **மெய்யாகவே, நான் சீக்கீரமாய் வருகிறேன்** (22:20) என்றும் சொல்லப்பட்டுள்ளதை நாம் நினைவில் கொண்டுள்ளோமா? அப்படிச் சொன்னவர் பொய்யுரை யாதவராயிற்றே! அப்படியானால், நாம் அவருடைய வருகைக்காக ஆயத்தமாகிக் கொண்டுள்ளோமா? சொல்லுங்கள். இயேசுவின் வார்த்தைகளைக் கேட்க ஆயத்தமாகாதவர்கள் அவருடைய வருகை க்காக ஒரு போதும் ஆயத்தமாக முடியாது.

கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பற்றிப் பேசும் மத்தேயு இருப்பத்து நான்காம் அதிகாரம் அந்த நாளையும், அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான். பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள் (வசனம் 36) என்று அடித்துச் சொல்லுகிறதே. அப்படியானால், இயேசுவின் வருகைக் காக அந்த பையன் போன்று ஆயத்த மனநிலை கொண்டவர்களாக நாம் உள்ளோமா? இரண்டாம் முறை வரும் இயேசுவானவர் இப்பூமிக்கு வரப்போவது இல்லை (II தெச.4:16,17). வானங்கள் அவர் வரும்போது மடமட என்று அகன்று, பூதங்கள் வெந்து உருகிப்போகும். பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம் (II பேதுரு 3:13). உண்மை நிலை இப்படி இருக்க, இப்பூமியில் ஆயிரம் வருட அரசாட்சிக்கான அடிப்படை எங்கே? ஏதாவது ஒரு வசனத்தைப் பிடித்துத் தொங்கிக் கொண்டு பரலோக பாக்கியத்தை இழந்து விடக்கூடாது. ஒட்டுமொத்த கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசம் என்ன சொல்லுகிறதென்று கவனிக்க வேண்டும். இயேசு ஆண்டவர் யோவான் 14-ம் அதிகாரத்தில் **நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறு படியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்** என்றே கூறியுள்ளார். (14:3). ஆகவே, அந்தப் பையன் போன்று சகல காரியங்களையும் கவனத்தில் கொண்டு, இயேசுவின் வருகைக் காகவும், பரலோக பாக்கியத்துக்காகவும் ஆயத்தமுள்ளவர்களாகக் கணப்பட வேண்டும்.

## III. *தியாக குணம் பெற்றவனாய் இருந்தான்*

இந்த விளையாட்டுப் பருவ ஆசிரியர் நமக்குக் கற்றுக் கொடுக்கும் இன்னுமொரு பாடம், இயேசுவைப் பின்பற்ற விரும்பும் ஒருவன் தியாக குணம் உடையவனாய் இருக்க வேண்டும் என்பது.

அத்திரேயா இங்கு ஒரு பையன் இருக்கிறான். அவனிடம் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும், இரண்டு மீன்களும் உண்டு என்றான் [வ.9]. அப்புறம் 11-ம் வசனத்தில், இயேசு அந்த அப்பங்களை எடுத்து மன்றாடினார் என்று பார்க்கிறோம். அப்படியானால், சீடர்கள் இயேசு **கேட்கிறார்** என்றவுடன் தன் பசியைப் பற்றிக் கவலைப்படாமல் **கொடுத்துள்ளான்** என்று தானே தெரிகிறது. நம்ம ஊர் சிறுவர்களாக இருந்திருந்தால் அழுது அடம்பிடித்து ஊரைக் கூட்டியிருப்பார்களே. இத்தனைக்கும் இவன் ஓர் ஏழைப் பையன் என்று தெரிகிறது. எப்படியெனில், வாற்கோதுமை அப்பங்கள் தான் கொண்டு வந்துள்ளான். வாற்கோதுமை என்பது வழக்கமான கோதுமையை விட மலிவானது. **நம்ம ஊர் ரேசன்** அரிசிபோல். ஆனால், இந்தச் சிறு வயதில் பணக்கார உள்ளம் கொண்டவனாக இருந்துள்ளான்.

தியாகம் என்பது தேவச் சிந்தை [யோவான் 3:16] மற்றும் கிறிஸ்துவின் சிந்தை [எபே.5:2]. இப்படிப்பட்ட சிந்தை ஆதியிலே ஆபிரகாமுக்குள்ளாக இருந்தபடியால்தான், அவன் **விசுவாசிகளின் தகப்பன்** என்னும் சிறப்புப் பதங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளான். தேவன் ஆபிரகாமின் ஏகபுத்திரனைப் பலியாகக் கேட்டபோது, மறுப்புச் சொல்லாமல் அதிகாலமே எழுந்து ஈசாக்கை அழைத்துக் இப்படிப்பட்ட, கொண்டு புறப்பட்டுப் போனான். தேவனைப் பின்பற்றும் ஒவ்வொருவருக்கும் இச்சிந்தை தேவை.

இப்பையனை போன்ற தியாகச் சிந்தை கொண்ட இன்னொரு மனிதனை நாம் லூக்கா நூலில் பார்க்க முடியும். ஆம், ஒரு சமயம் அவர் எருசலேமுக்குள்ளாகப் பிரவேசிக்க ஆயத்தமாகி ஒலிவ மலை யின் அடிவாரத்தில் இருக்கும்போது, எதிரே உள்ள கிராமத்துக்குப் போய், மனிதரில் ஒருவரும் ஒருக்காலும் ஏறியிராத கழுதைக் குட்டியை அவிழ்த்து வாருங்கள், யாராவது கேட்டால், **அது ஆண்டவருக்கு வேண்டுமென்று** சொல்லுங்கள் என்றார். அப்படியே அவர்கள் **அது ஆண்டவருக்கு வேண்டுமென்று** சொன்ன போது, இந்தப் பையன் போன்று மறுபேச்சு பேசாமல் அனுப்பிக் கொடுத்தாள் [லூக்கா 19:30-35]. தியாகம் என்று வரும்போது, இந்தச் சாமானியர்களை நாமெல்லாம் பெரிதாக நினைப்பதே இல்லை. அப்படித்தானே!

பவுலடியார் கிறிஸ்துவுக்காக எல்லாவற்றையும் நட்டமென்று எண்ணினார் [பிலி.3:7] என்பதைக் கத்திப் பேசும் நாம், ஆபிரகாமை அவன் தியாகத்துக்காக முடிந்தளவு தூக்கிப் பிடிக்கும் நாம் **கழுதைக்குட்டிக் காரனையும், வாற்கோதுமை பையனையும்** ஓரக் கண்ணால் கூடப் பார்ப்பதில்லையே. பெரும் தேவ மனிதர்களைக் காட்டிலும் இவர்கள் பால் நம் சிந்தையைச் செலுத்துவது நமக்கு

உண்மையில் நல்லது. ஏனெனில், நம்மாலும் முடியும் என்ற உந்துதலை இவர்களைப் போன்றவர்களிடமிருந்து நாம் பெற்றுக் கொள்ள முடியும்.

ஆகையால், அருமையானவர்களே! தேவனுக்காகவும், கிறிஸ்துவுக்காகவும் விட்டுக் கொடுப்பதில் நாம் தாராளமுடையவர்களாய், தியாகமுள்ளவர்காய் இருக்க வேண்டும். அதிலும் குறிப்பாக, கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசங்கள் மற்றும் கிறிஸ்துவால் வாக்களித்துக் (மத்.16:18) கட்டடப்பட்ட ஒன்றான சரீரமான மெய்ச் சபை ( எபே:4:4) என்று வரும்போது, வீண் பிடிவாதம் பிடித்துப் பாரம்பரியப் பெருமை பேசிக் கொண்டிராமல் கண்ணை மூடிக்கொண்டு நாம் விட்டுக்கொடுத்து விட வேண்டும். அங்கே நாம் மாம்சத்தோடும், இரத்தத்தோடும் யோசனை பண்ணுகிறவர்களாக இருக்கக் கூடாது (கலா .1:16). தமஸ்கூ செல்லும் வழியில் சவுலை இயேசு சந்தித்த போது, இப்படிப்பட்ட சிந்தை கொண்டவராகவே ஆண்டவரே, **நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்** என்று கோட்டுள்ளான் ( அப் .9:6). கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசப்படி நாம் இரட்சிக்கப்பட்டு, கிறிஸ்துவின் சபையில் முடிவுவரை நிலைத்திருந்து, இறுதியில் நாம் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள வேண்டுமானால், இந்த வாற்கோதுமைப் பையன் போல தியாக சிந்தையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். மாறாக, கிறிஸ்துவின் உபதேசத்துக்கு எதிரானவைகளையும், கிறிஸ்துவின் சபைக்கு சம்பந்தம் இல்லாதவைகளையும் நாம் உடும்புப் பிடியாய் பிடித்துக் கொண்டு நித்திய ஜீவனையும் பெற்று விடுவோம் என்று எண்ணுவோமானால், அது கானல் நீராகி விடும். சிந்திப்போம்! நம் பக்தி நிலையை ஆய்வுக்கு உட்படுத்துவோம்! கோணலானவைகளை நேராக்குவோம்! மறுமையை தேவாதி தேவனோடும், இயேசு ஆண்டவரோடும் கழிப்போம்! ஆமென்!! ✝

---

## பிரச்சனைகளுக்கான தீர்வு!

**பிரச்சனைகள் வரும் போது சங்கட சமயங்களிலும் நாம் கைகளை பிசைவதைக் காட்டிலும் எல்லாவற்றையும் தேவனுடைய கைகளில் விட்டுவிட்டால் கடைசியில் தேவனுடைய கைகள் எல்லாவற்றிற்கும் மேலாக இருந்து தீர்க்கமாக விசாரிக்கிறபடியால், உங்கள் கவலைகளை யெல்லாம் அவர் மேல் வைத்து விடுங்கள் (I பேதுரு 5:7)**

# பிசாசுகளைத் துரத்துதல்

Bro. J.C. சோட்

இப்போது எழும் கேள்வி என்னவென்றால், இன்று பிசாசுகள் மனிதர்களைப் பிடிக்கின்றனவா? நாம் இதுகாறும் பார்த்த காரியங்களை வைத்துப் பார்க்கும்போது இல்லை என்பது தான் பதிலாக இருக்கிறது. ஆனால், பலர் இன்றும் பிசாசுகள் இருப்பது நிச்சயம், அவைகள் மனிதர்களை அலைக்கழிக்கின்றன என்கிறார்கள். அதற்கு அவர்கள் பல உதாரணங்களையும் காண்பிக்கிறார்கள். இப்படிப்பட்ட காரியங்களில் ஒருவர் எளிதாக வஞ்சிக்கப்பட முடியும். அதிலும் குறிப்பாக, வேத வாக்கியங்கள் இதைக் குறித்து என்ன போதிக்கின்றன என்பதை ஒருவர் தெளிவாகப் புரிந்துகொள்ளாதபோது வஞ்சிக்கப்படுவதென்பது இன்னும் எளிதாகிவிடுகிறது. ஆம், எனக்குத் தெரிந்த வாலிபன் ஒருவனுக்கு வலிப்பு நோய் உண்டு. அடிக்கடி அவனுக்கு வலிப்பு வந்துவிடும். அதினிமித்தம், அவனுடைய பெற்றோர் அவனுக்குள் அசுத்த ஆவி பிடித்திருப்பதாக நினைத்தார்கள். ஆனால், அவனுக்கு எந்த ஆவியும் பிடிக்கவில்லை. அதாவது, நோய்க்கும் பேய்க்கும் சம்பந்தமில்லை.

மற்றொரு சந்தர்ப்பத்தில் உடம்பு வீங்கிய ஓர் இளம் பெண்ணைப் பார்த்தேன். அவள் அதன் காரணமாக மிகுந்த உபத்திர வப்பட்டுக்கொண்டிருந்தாள். அவளுடைய பெற்றோர், உறவினர் மற்றும் நண்பர்கள் அவளுக்கு பிசாசு பிடித்திருந்ததாக நினைத்தார்கள். ஆனால், மருத்துவ சோதனையில், அவளுக்கு கிருமிகளால் பரவும் நோய்தொற்று இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

1970 களில், புதுதில்லியில் எனக்குத் தெரிந்த ஒருவருடைய வீட்டிற்கு ஜெபத்திற்காக அழைக்கப்பட்டிருந்தேன். அந்நபர் என்னிடம், தனக்குப் பேய் பிடித்திருப்பதாகவும், அப்பேய் விரட்டப்பட ஜெபிக்கும்படியாகக் கேட்டுக்கொண்டார். அப்பொழுது நான் அவருக்கு இந்தக் காரியத்தைக் குறித்து வேதாகமம் என்ன சொல்கிறது என்பதை விளக்கிக்கூறினேன். ஆனாலும் அவர், என்னை ஜெபிக்கும்படியாகத் தொடர்ந்து வற்புறுத்தினபடியால், அவர் பெலனடையும்படியாகவும், ஆரோக்கியமடையும்படியாகவும், அவர் உணவையும், அதைத் தொடர்ந்து மருந்தையும் உட்கொள்ளும்படியாகவும், அவர் அசுத்த ஆவிகள் சம்பந்தமாக சத்தியத்தைப் படித்துத் தெளிவடைய வாய்ப்புக் கிடைக்க வேண்டுமென்றும் ஜெபித்தேன். இந்த நபரை பிசாசு பிடித்து அலைக்கழிக்கவில்லை. மாறாக, இவரே பிசாசின் கிரியைகளைத் தன் வாழ்வில் பிரவேசிக்க அனுமதித்து, தான் தவறான பாதையில் செல்ல தனக்குத் தானே வாய்ப்பை ஏற்படுத்திக்கொண்டார்.

என் வாழ்க்கையில், பிசாசுகள் ஓட்டப்பட்ட கதைகள் பலவற்றைக் கேட்டிருக்கிறேன். சம்பந்தப்பட்டவர்களிடம் அதைக் குறித்து விசாரிக்கும்போது ஏதோ ஒரு மார்க்கப் பிரிவினை பிரசங்கியார் தான் பிசாசுகளைத் துரத்தியதாகச் சொல்லக் கேட்டேன். மார்க்கப்பிரிவினை பிரசங்கியார்கள் கள்ளப்போதகங்களைப் போதிக்கிறவர்கள் என்பதை அறிந்திருக்கிறேன். என்னுடைய கேள்வி என்னவென்றால், பெயல்செபூலினால் நமதாண்டர் பிசாசுகளைத் துரத்துவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டபோது, சாத்தானை சாத்தான் துரத்த முடியுமா? என்று இயேசு ஆண்டவர் கேட்டது நினைவுக்கு வருகிறது. அதாவது சாத்தானை சாத்தான் எப்படித் துரத்த முடியாதோ, அப்படித்தான் மார்க்கப்பிரிவினைக் கூட்டத்தாரும் பிசாசுகளைத் துரத்த முடியாது.

மக்களில் அநேகர் சாத்தான் எப்படிக் கிரியை செய்கிறான் என்பதைப் பற்றிய அறிவில்லாதிருக்கிறார்கள். அதாவது, சாத்தான் சம்பந்தமான போதனைகளைப் பற்றிய தவறான புரிந்து கொள்ளுதல், பொருளாதாரத்தில் பின் தங்கியவர்கள், படிப்பறிவில்லாதவர்கள் மத்தியில் அதிகமாகக் காணப்படுகிறது. இவர்கள் மத சம்பந்தமான காரியங்களிலும், உலகப் பிரகாரமான காரியங்களிலும் மூடநம்பிக்கை என்னும் இருளில் மூழ்கிக் கிடப்பவர்கள். இப்படிப்பட்டவர்களை சாத்தான் சம்பந்தமான காரியங்களில் தவறாக வழி நடத்துவது மிகவும் சுலபமாகும்.

முதல் நூற்றாண்டில் ஒருவருக்குள் பிசாசு புகுந்து அலைக்கழிப்பது போல் இன்று நடப்பதில்லை. ஆனால், சாத்தானுடைய கிரியைகள் ஒரு மனிதனுக்குள் புகுந்து அதன் நோக்கத்தை நிறைவேற்ற அவர்களைப் பயன்படுத்துவதையும் நம்மால் மறுக்க முடியாது. அதேவேளையில், பிசாசு ஒருவருக்குள் புகுந்து அவரைப் பாடாய்படுத்தி அந்நபர் தன் கட்டுப்பாட்டை இழப்பதற்கும், ஒருவர் தீமையான காரியங்களுக்காகவே தன் வாழ்க்கையில், எண்ணத்தில் விருப்பப்பட்டு வரவேற்பதற்கும் உள்ள வித்தியாசத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். முதல் நூற்றாண்டில், பிசாசு பிடித்தவர்களை அற்புத அடையாளங்கள் மூலமாகத்தான் துரத்தியடிக்க முடியும். ஆனால், இன்றைய நாட்களில் ஒருவர் சாத்தானை தன்னுடைய வாழ்வில் அனுமதிக்கவும் முடியும், விரட்டியடிக்கவும் முடியும். இது தான் வித்தியாசம்.

இன்றைய நாட்களில் வாழும் நம்முடைய வாழ்க்கையில், நாம் அனுமதிக்கவில்லையென்றால் சாத்தானால் நமக்குள் புகுந்து அலைக்கழிக்க முடியாது. ஒருவேளை, அன்றைக்கு இருந்ததுபோல

இன்றைக்கும் சாத்தானால் மனிதனைப் பிடிக்க முடியுமென்று வேதாகமம் போதித்தால் அது உண்மையாகவே பயங்கரமாயிருக்கும். ஒன்றை மட்டும் உறுதிபடத் தெரிந்து கொள்ளுங்கள். இன்று பிசாசுகளைத் துரத்த கிறிஸ்துவும், அவருடைய அப்போஸ்தலர்களும், அவர்களால் கைகளை வைக்கப்பட்டவர்களும் இன்று இவ்வுலகில் இல்லையே!ஆகையால், நம் இருதயங்களில் நம்மை ஆள்வது கிறிஸ்துவா, சாத்தானா என்பதை நாம்தான் முடிவுசெய்யவேண்டும். மேலும், கிறிஸ்துவும், அவருடைய உபதேசமும் நமக்குள் இருக்கும்வரை, அதாவது கிறிஸ்து நமக்குள்ளும், நாம் கிறிஸ்துவுக்குள்ளும் இருக்கும் வரை சாத்தானால் நம்மை நெருங்கவே முடியாது. நெருங்கினால் நொறுங்கிப் போவான் என்பதை விசுவாசித்தால் வீழ்ச்சியில்லை!

✝

## கண்களைப்பற்றி வேதாகமம்

1. கண்ணானது சரீரத்தின் ஓர் அவயமாயிருக்கிறது (I கொரி. 12:12,14,18)

2. மாம்சமான கண்கள் மனுஷன் பார்க்கிற பிரகாரமாய் பார்க்கும் ( யோபு 10:4)

3. உன் கண்கள் காணும் காரியங்களினாலே மதி மயங்கி போவாய் ( உபாகமம் 28:34)

4. உன் கண்கள் உனக்கு இடறல் உண்டாக்கினால் அதை பிடுங்கிப்போடு (மத்தேயு 5:28, 29)

5. கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது ( மத்தேயு 6:22).

பெண்கள் பகுதி

# கிறிஸ்துவின் அன்பு என்னை நெருக்கி ஏவுகிறது!

Sis. ரேச்சல் இராஜநாயகம்

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! உங்கள் யாவருக்கும் மீட்பர் இயேசுவின் நாமத்தினாலே ஸ்தோத்திரங்களை ஏறெடுத்துக் கொள்கிறேன். இந்த மாதமும் கர்த்தருடைய ஜீவனுள்ள வார்த்தைகளை சேர்ந்து படிக்க தேவன் கொடுத்த கிருபைக்காக அவருக்கு ஸ்தோத்திரம்.

தேவன் நம்மேல் வைத்த அன்பைக் காட்டிலும் மேலான அன்பு இந்த உலகத்தில் எதுவுமே இல்லை. அது பூமிக்குரிய அன்பைப் போல மாயமான அன்பல்ல. தன்னலமற்றது. கொடுக்கும் அன்பு. தன் ஒரே பேறான குமாரனைக் கொடுத்ததால்தான் இந்த உலகிற்கு இரட்சிப்பு கிடைத்தது. அப். 2 ம் அதிகாரத்தில் பாவ மன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெற்று இரட்சிப்பை ஒருவர் பெற வேண்டும். இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துகொண்டு வந்தார்[அப்: 2:47] – என்று வாசிக்கிறோம். இந்த அடிப்படையில் ஞானஸ்நானம் பெற்று சபையில் சேர்க்கப்படுபவர் களின் கூட்டம் தான் கிறிஸ்துவின் சபையார் ரோமர் 16:16 என்று அழைக்கப்படுகிறார்கள். இந்த மாபெரும் சிலாக்கியத்தை நம்மால் உண்டாக்க முடியாது. தேவனுடைய ஈவு, தேவனுடைய கிருபை, இரக்கம், அன்பு இவைகளே இரட்சிப்புக்கு காரணம். நம் பாவங்களுக்காக கிறிஸ்து பலியானார். கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டோம்.

சரி, இனி நம்மேல் விழுந்த கடமை என்ன? நமக்காக பாடுகள், நிந்தைகள், அவமானங்கள், அடி, பரியாசம் முதலியவைகளைப் பட்டு, சிலுவையில் மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாள் உயிரோடெழுந்த இயேசு கிறிஸ்து நமக்கு கொடுத்த கட்டளை யென்ன? உலகம் எங்கும் சென்று சர்வ சிருஷ்டிக்கும் சுவி சேஷத்தை பிரசங்கியுங்கள் என்றார். அந்தக் காரியம் இன்று நடக்கிற மாதிரி தெரியவில்லை. ஞானஸ்நானம் பெற்றவர்களை சபையில் தக்கவைத்து கொள்வதே பெரிய சவாலாக இருக்கிறது. மனந்திரும் புதலுக்கேற்ற கனிகளை கொடுக்க முடியாமல் தடுமாறுகிறார்கள் இப்படியிருக்கும் போது ஆத்தும ஆதாயம், சபையின் ஆவிக்குரிய வளர்ச்சிப்பணிகள் போன்ற காரியங்கள் செய்யப்பட வேண்டிய அளவுக்கு செய்ய முடியாமல் போய்விடுகிறது.

நமதாண்டவராகிய இயேசு கிறிஸபுது எப்போதும் ஆவிக்குரிய பார்வையோடுதான் இருப்பார். இழந்து போனவைகளை தேடுவதும், இரட்சிப்பதுமே அவருடைய வேலை இயேசு தன் சீடர்களிடம் கூறுகையில், பகற்காலமிருக்கு மட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்ய வேண்டும். ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது (யோ:9:4) நாம் காணும் ஒவ்வொரு நாளும் கிருபையாய் தேவனுடைய கரத்திலிருந்து கிடைக்கிறது. அதை நம் இஷ்டத்துக்கு செலவு செய்கிறோமா? வீணாகவும் கழிக்கலாம் அல்லது ஒளியாகிய வசனத்தை பிறரோடு சேர்ந்து பகிர்ந்து சேவையும் செய்யலாம். நாளை ஒரு வேளை வரும். ஆனால், இன்றைக்கு நான் செய்ய தவறியது தவறியதுதான். அதற்காள விலையை நான் கொடுக்க வேண்டும் என்ற உண்மை நமக்கு வருத்தம் அளித்தாலும் ஏற்றுத்தான் ஆகவேண்டும். யாக்கோபு ஆசிரியர் கூறும்போது நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சக் காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப் போலிக்கிறதே (யாக்: 4:14). என்கிறார்.

இந்த உலகத்தின் வாழ்வு புகையை போன்று இருப்பதால், காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ள வேண்டும். நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து ஒருவன் என்னில் அன்பாயிருந்தால் அவன் என் வசனத்தைக் கைக்கொள்வான் என்று யோவான் 14:23-ல் கூறியிருக்கிறார். அதே யோவான் ஆசிரியர் தன்னுடைய நிருபத்தில் I யோவான் 5:3 ல் கூறும் போது நாம் தேவனுடைய கற்பனைகளை கைக் கொள்ளுவதே அவரிடத்தில் அன்பு கூருவதாம் என்கிறார். இந்த அன்பு என்பது எதைக்குறிக்கிறது. வேதாகமத்தில் உள்ள வசனத்தின் படி செய்ய வேண்டும். அது தான் அன்பு பிறர் ஆத்மா மீது அன்பு ஏற்படும். அவர்கள் ஆத்துமா நித்திய ஜீவனுள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நமக்கு ஒரு பாரமும், அக்கறையும், கரிசனையும் உண்டாகும். பிறர் இரட்சிப்பின் மீது அக்கறையும், நாட்டமும் கொள்வதே அன்பு. சரீரப்பிரகாரமான கொடுக்கல், வாங்கல், உண்டல், உறங்கள், போதல், வருதல் என்பது அன்பல்ல. இயேசுவும், அப்போஸ்தலர்களும் இப்பேர்பட்ட அன்பைக் கொண்டிருக்கவில்லை. ஆத்துமாக்களின் மீது அக்கறையும் பரிதாபமும் ஆத்துமாக்களை தேடி அலைவதுமே உண்மையான அன்பு.

இதை வாசிக்கும் சகோதரிகளே! நம் அன்பு எப்படியிருக்கிறது சுயநலமான அன்பாக இருக்கிறதா? அப்போஸ்தலன் பவுல் எல்லோரும் கிறிஸ்துவுக்குள்ளாக மரித்து எழுந்து (ஞானஸ்நானம்) புதிய சிருஷ்டிகளாக மாற வேண்டும் என்று விரும்பியே கிறிஸ்து வின் அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது என்கிறார் (II கொரி 5:14). வசனத்தின் படி வாழ்கிறேன் என்று சொல்லிக் கொண்டு பிறருடைய ஆத்துமாவைப் பற்றி அன்பில்லாமல் இருந்தால் அதில் ஒரு பிரயோஜனமுமில்லை. அருமையானவர்களே! பெண்கள், பெண்களைத் தேடிச் சென்று பேசி, அவர்களை ஆதாயம் செய்வோம். தேவன் அதில் மிகவும் பிரியப்படுவார். ஆத்துமாக்கள் அழிந்து கொண்டுள்ளன. அன்புடனும் (வசனத்துடன்) பொறுமை யுடனும் அணுகி எப்படியாவது அவர்கள் பிசாசின் கையிலிருந்து விடுதலை செய்து இரட்சிப்பெற உதவி செய்வோம். அதற்கு நாம் முதலாது வசனம் தெரிந்து, வசனத்தின் படி வாழ்வோம். சத்தியத் தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும் (யோவான் 8:32).

ஆக, அருமையான சகோதரிகளே! தேவன் நம்மேல் வைத்த அன்பினாலே நம் விடுதலை ( இரட்சிப்பு) பெற்றது போல, பிறரும் இரட்சிக்கப்பட வேண்டுமென்ற அன்பு நம்மிடத்தில் காணப்பட வேண்டும். அந்த அன்பு நம்மை நெருக்கி , ஏவி செயல்பட வைக்க நாம் அனுமதி கொடுக்க வேண்டும். தேவன் அதற்கு ஒத்தாசையும், உதவியும் செய்வாராக! ஆமென்!! ✝

---

## நான் கிறிஸ்துவுக்குள் இருக்கிறபடியால் ....

1. **நான் நீதிமானாக்கப்பட்டிருக்கிறேன் (ரோமர் 5:1)**

2. **என் வாழ்க்கையை ஆண்டு கொண்டிருந்த பாவத்திற்கு மரித்துவிட்டேன் ( ரோமர் 6:6)**

3. **நான் ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து விடுதலையாக்கப்படிருக்கிறேன் ( ரோமர் 8:1)**

4. **நான் கிறிஸ்துவின் சிந்தையைப் பெற்றிருக்கிறேன் (I கொரிந்தியர் 2:16)**

# எப்படிப்பட்ட ஆயத்தமுள்ளவர்களாக இருக்கிறோம்?

Dr. **ஏபில் நாயகம்**

யோவான் 14:3 ல் நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன் என்று இயேசு வாக்கு கொடுத்திருக்கிறார். ஆம், மீண்டும் வந்து நம்மை அழைத்துக் கொண்டு போவார். ஆனால் அதற்கு ஆயத்த நிலையில் நாம் இருக்க வேண்டும் என்பது அவருடைய கட்டளையாகவும் அறிவுரையாகவும் இருக்கிறது.

மத்தேயு 24 மற்றும் 25 ம் அதிகாரங்களில், ஆயத்தமாகுதலின் முக்கியத்துவத்தை நாம் வாசிக்க முடியும். கடந்த மாதத்தின் ஆசானில், ஆயத்தமே இல்லாமல் இருப்பதின் விளைவையும் நம்மை ஆத்தப்படுத்திக்கொள்ள காலம் தாழ்த்துவதின் விளைவையும் பார்த்தோம். அதன் தொடர்ச்சியாக 25 ம் அதிகாரத்தில் உள்ள உவமைகளை நாம் கவனிப்போம்.

## அரைகுறையான ஆயத்தம்

மத்தேயு 25:1–13 வசனங்களில் பத்து கன்னிகைகளைக் குறித்த உவமையை வாசிக்க முடியும். அந்த 10 கன்னிகைகளில் 5 பேரை இயேசு புத்தியுள்ளவர்கள் என்றும், மற்ற 5 பேரை புத்தியில்லாதவர்கள் என்றும் கூறுகிறார். இயேசுவானவர் ஒருவரை புத்தியில்லாதவர் என்று சொல்லுகிறார் என்றால், அது நம் கவனத்தை ஈர்க்க வேண்டும். ஏனென்றால் நம்மை நியாயம் தீர்க்கப் போகிறவர் அவர் ஆயிற்றே!

இந்த உவமையிலே, அரைகுறை ஆயத்தத்தோடு இருந்தவர் களை புத்தியில்லாதவர்கள் என்று அடையாளப்படுத்துகிறார். மணவாளன் வர காத்திருந்தவர்களைப் பார்த்துத்தான் அதை சொல்லுகிறார். அப்படியானால் அவருடைய வருகையை நம்பி, அதற்காக காத்திருந்தாலும் இயேசுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள போதுமானதாக இருக்கவில்லை. இவ்விரு செயலோடு, போதுமான ஆயத்தம் தேவை என்ற உண்மையை நாம் இதன் மூலம் அறிய முடிகிறது.

மணவாளன் வந்துவிட்ட பிறகு, நாம் ஆயத்தமாக முடியாது. அதுமட்டுமல்ல. நம் நீதியை நாம் நமக்கு பிரியமானவர்களோடு பகிர்ந்து கொள்ள இயலாது. II கொரி 5:10ல் வாசிக்கிற வண்ணம்

நாம் சரீரத்தில் செய்யும் ஒவ்வொரு கிரியைக்குமான தக்க பலனை நாம் அடைந்தாக வேண்டும். ஆக, நம் நீதி நம் வீட்டாரை காப்பாற்றாது.

மத் 25:10 ல் ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடுகூடக் கலியாண வீட்டுக்குள் பிரவேசித்தார்கள் என்று வாசிக்கிறோம். பிரியமான வர்களே! ஆயத்தமில்லாத கன்னிகைகளுக்கு கதவு அடைக்கப் பட்டது. அது மட்டுமல்ல, அவர்கள் கதவை தட்டினபோது, மணவாளன் அவர்களைப் பார்த்து உங்களை அறியேன் என்று சொன்னார். பரிதாபமான ஒரு நிலை. யாருக்காக காத்திருந்தார் களோ, அவரே உங்களை எனக்கு தெரியாது என்று சொல்லும் பொழுது அதைவிட பரிதாபமான நிலை உண்டா? நாம் கவனிக்க வேண்டியது, அந்த பரிதாப நிலைக்குக் காரணம், அவர்களின் அரைகுறை ஆயத்தம்.

நிச்சயமாக வருவேன் என்று சொல்லியிருக்கிறார். அவர் வருவார். ஆயத்தமாயிருங்கள் என்றும் சொல்லியிருக்கிறார். (மத் 24:44). கேள்வி இது தான். அவர் வரும்போது எப்படிப்பட்ட ஆயத்தத்தோடு நாம் இருக்கிறோம்? கிறிஸ்துவின் வருகையிலே நாம் புத்தியுள்ளவர்களாக இருக்கப்போகிறோமா? அல்லது புத்தியில்லாதவர்களாக இருக்கப்போகிறோமா? சிந்திப்போம்.

**மணவாளன் வர காத்திருக்கும் நாம் என்ன செய்ய வேண்டும்? (நல்ல ஆயத்தம்).**

மத் 25:14-46 வரை நாம் வாசிக்கும்போது எஜமான் தன் ஊழியக் காரர்களுக்கு தன் ஆஸ்தியை பங்கிட்டுக்கொடுத்த உவமையை வாசிக்க முடியும். அந்த எஜமான் தான் திரும்ப வரும்வரை ஆஸ்தி களை தன் ஊழியக்காரரிடத்தில் கொடுத்தான்.

ஐந்து தாலந்தை வாங்கினவன் அதை பத்தாக்குகிறான். இரண்டு தாலந்தை வாங்கினவன் அதை நான்காக்கினான். ஆனால், ஒரு தாலந்தை பெற்றவனோ, அதை நிலத்தில் புதைத்து வைத்தான். எஜமான் திரும்பி வந்தபோதோ, ஐந்து தாலந்தை வாங்கி னவனையும், இரண்டு தாலந்து வாங்கினவனையும் பாராட்டி, எஜமானுடைய சந்தோஷத்துக்குள் பிரவேசி என்று கூறினார். ஆனால், ஒரு தாலந்தை புதைத்து வைத்த ஊழியக்காரனைப் புறம்பான இருளிலே தள்ளிப் போடுங்கள் என்று கூறினார்.

பிரியமானவர்களே! நாம் பெற்றுக்கொண்ட இரட்சிப்பை நாம் நிறைவேற்ற பிரயாசப்பட வேண்டும். இரட்சிக்கப்பட்டுவிட்டேன் என்பதோடு இல்லாமல், அதிலே பெருகவும் வளரவும் வேண்டும். அதற்கான முயற்சியில் நாம் ஈடுபட வேண்டும். நாம் தேறுகிறது யாவருக்கும் தெரிய வேண்டும். ஒருவேளை இரட்சிக்கப்பட்டு, பாலுண்கிறவர்களாகவே இருந்துவிட்டால் நாம் ஒரு தாலந்தை வாங்கி புதைத்த ஊழியக்காரனைப்போல் இருப்போம். அதை தேவன் அங்கீகரிப்பாரா? நாம் நம் ஏஜமானுடைய சந்தோஷத்தில் பிரவேசிக்க முடியுமா?

நிச்சயமாக வருவேன் என்று சொல்லியிருக்கிறார். அவர் வருவார். ஆயத்தமாயிருங்கள் என்றும் சொல்லியிருக்கிறார். (மத் 24:44). கேள்வி இது தான். அவர் வரும்போது எப்படிப்பட்ட ஆயத்தத்தோடு நாம் இருக்கிறோம்? கிறிஸ்துவின் வருகையிலே நாம் புத்தியுள்ளவர்களாக இருக்கப்போகிறோமா? அல்லது புத்தியில்லாதவர்களாக இருக்கப்போகிறோமா? சிந்திப்போம்.

**மணவாளன் வர காத்திருக்கும் நாம் என்ன செய்ய வேண்டும்? (நல்ல ஆயத்தம்).**

மத் 25:14-46 வரை நாம் வாசிக்கும்போது எஜமான் தன் ஊழியக்காரர்களுக்கு தன் ஆஸ்தியை பங்கிட்டுக்கொடுத்த உவமையை வாசிக்க முடியும். அந்த எஜமான் தான் திரும்ப வரும்வரை ஆஸ்திகளை தன் ஊழியக்காரரிடத்தில் கொடுத்தான்.

ஐந்து தாலந்தை வாங்கினவன் அதை பத்தாக்கினான். இரண்டு தாலந்தை வாங்கிலைன் அதை நான்காக்கினான். ஆனால் ஒரு தாலந்தை பெற்றவனோ, அதை நிலத்தில் புதைத்து வைத்தான். எஜமான் திரும்பி வந்தபோதோ, ஐந்து தாலந்தை வாங்கினவனையும் இரண்டு தாலந்து வாங்கினவனையும் பாராட்டி, எஜமானுடைய சந்தோஷத்துக்குள் பிரவேசி என்று கூறினார். ஆனால், தாலந்தை புதைத்து வைத்த ஊழியக்காரனைப் புறம்பான இருளிலே தள்ளிப் போடுங்கள் என்று கூறினார்.

பிரியமானவர்களே! மத் 24, 25 ல் இயேசு தம் இரண்டாம் வருகையின் நிச்சயத்தை சொல்லியிருக்கிறார்கள். அந்த நாளை பிதா ஒருவர் தவிர வேறே யாரும் அறியமுடியாது என்று எச்சரிக்கிறார். எனவே, நிச்சயமாக வரும் ஒரு நாளை, எப்பொழுது என்று தெரியாத அந்நாளை தைரியமாய் எதிர்கொள்ள ஆயத்த மாயிருங்கள் என்று நமக்கு அறிவுறுத்துகிறார். நாம் எப்படி இருக்கிறோம்? எப்படிப்பட்ட ஆயத்தம் நம் வாழ்வில் இருக்கிறது.

நித்திய ஆக்கினையா? நித்திய ஜீவனா? சிந்தித்து செயல்படுவோம். ✝

சிறுவர் பகுதி

## நீங்கள் ஞானமுள்ளவர்களாயிருக்கிறீர்களா?

Dr. *பிரெய்ஸி*

ஹாய் குட்டீஸ்! நீங்கள் எல்லாரும் உங்கள் விடுமுறை நாட்களை மகிழ்ச்சியாக கழித்துக் கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறோம். அதேபோல் பரீட்சை எழுதிக் கொண்டிருக்கிற பிள்ளைகள் நன்றாக எழுதிக் கொண்டிருப்பீர்கள் என்றும் நம்புகிறோம். கடந்த மாதம் நாம் முதியவர்களுக்கு செவி கொடுத்தலைப் பற்றியும், எஸ்தரைப் போல் ஞானமாய் நடந்து கொள்வதைப் பற்றியும் பார்த்தோம்.

இம்மாதம் நாம் மத்தேயு 25:1–13 வசனங்களில் இடம் பெற்றுள்ள பத்து கன்னிகைகளின் உவமையைப் பற்றி பார்ப்போம். நாமெல்லோரும் இயேசு கிறிஸ்து இரண்டாம் முறை வரும் போது ஆயத்தமாயிருக்கும் ஐந்து புத்தியுள்ள கன்னிகைகளைப் போல் ஆயத்தமாயிருக்க வேண்டும். நாம் அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதன் மூலமாகவும், சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிவதன் மூலமாகவும் ஞானமுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

நாம் பரீட்சை வேளையில் அதற்காக பள்ளியிலும், வீட்டிலும் ஆயத்தமாகிறோம். அதேபோல், நாம் அவருடைய வார்த்தையைப் பின்பற்றி நம் வாழ்வின் எல்லா நிலைகளிலும் அவருக்கு கீழ்ப்படிவதன் மூலமாக எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கவேண்டும். நம் வாழ்வில் அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியும் போது மத்தேயு 7:24,27 வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிற கன்மலையின் மேல் தன் வீட்டைக்கட்டின புத்தியுள்ள மனுஷனைப்போல் இருப்போம்.

அருமையான பிள்ளைகளே, நீங்கள் அந்த புத்தியுள்ள ஐந்து கன்னிகைகளைப் போலிருக்க வேண்டுமென்றால் அவருடைய வார்த்தையை அறிந்து, அதற்கு கீழ்ப்படியும்படி உங்கள் எல்லோரையும் கேட்டுக்கொள்கிறோம். நீங்களெல்லாரும் தேவனுக் காகவும், அருவடைய வேலைக்காகவும் எப்போதும் ஆயத்த மாயிருக்கும் படி உங்களை கேட்டுக் கொள்கிறோம்.

**அன்புடன்,**
**உங்கள் பிரெய்ஸி அக்கா.**

# வினாக்கள் :

**மத்தேயு** 25:1-13

1. இந்த உவமையில் எத்தனை கன்னிகைகள் இருந்தார்கள்?

2. எத்தனை பேர் தூங்கிவிட்டார்கள்?

3. அவர்கள் எப்போது எழுந்திருந்தார்கள்?

4. மணவாளனோடு சென்றது யார்?

5. அந்த புத்தியில்லாத கன்னிகைகள் என்ன செய்தார்கள்?

# நாளும் நடப்பும்

1. ஏடிஎம் கார்டுகளில் கொரோனா வைரஸ் அதிக நேரம் உயிர் வாழும் - ஆய்வில் அதிர்ச்சி

2. இலங்கையில் பிரதமராக மீண்டும் ரணில் விக்ரமசிங்கே நியமனம்

3. தமிழ்நாட்டில் பல இடங்களில் பரவலாக மழை பெய்து வருவதால் வெயிலின் வெப்பத்திலிருந்து மக்களுக்கு ஆசுவாசம்.

4. இந்தியாவில் புதிய தேர்தல் கமிஷனராக ராஜீவ்குமார் அவர்கள் நியமனம்

5. தாமஸ் கோப்பை பேட்மிண்டன் போட்டியில் இந்தியா முதன் முறையாக கோப்பையை வென்றது.

# கேள்வி பிறப்பது நன்மையே

சகோ. K.M. பிலிப் – பவானி

**பொ**துவாகக் கேள்வி கேட்டால் மற்றவர்களுக்கு கோபம்தான் வரும். ஆனால், கேள்விகள் பிறந்தால்தான் ஞானம் கிடைக்கும், வழி பிறக்கும். இதில் மற்றவர்கள் நம்மைப் பார்த்து கேட்கும் கேள்வியைக் காட்டிலும் நம்மை நாமே கேட்டுக்கொள்ளும் கேள்விகள்தான் மிகச்சிறந்த பலனைக் கொடுக்கும். காடுகளில் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த ஓர் இளம் வாலிபனிடம் பிறந்த ஞானமான கேள்விதான் ஆடுமேய்ப்பவனை அரச அரியணையில் அமரச் செய்தது. இது வெறும் கேள்வியில்லை. எதேச்சையாய் எழுந்ததுமல்ல. தேவநாமம் தூசிக்கப்படுவதை சகிக்க முடியாமல், அவன் உள்ளத்தின் ஆழத்திலிருந்து தூண்டப்பட்ட கேள்வியாகும். இக்கேள்வியின் விரிவாக்கத்தைதான் I சாமு. 17ல் கான்கிறோம். I சாமு 17:29ல் நான் வந்ததற்கு முகாந்தரம் இல்லையா? (காரணம்) என்று அவன் உள்ளத்தில் எழுந்த கேள்வியும், அதற்கு அவனே பதிலாக நின்றதும்தான் அவனது உயர்வுக்கு ஊன்று கோலாய் அமைந்தது. அந்த உன்னதமான மனிதன்தான் தாவீது.

போருக்குச்சென்ற தன் சகோதரர்கள் பற்றி 40 நாட்கள் ஆகியும் ஒரு செய்தியும் கிடைக்காததால் தகப்பனுடைய கட்டளைக்குப் பணிந்து, விரைந்து போக்களத்திற்கு வந்தான். அவ்வேளையில் எதிரணியான பெலிஸ்தர் படையிலிருந்து இராட்சத உருவம் கொண்ட கோலியாத் எழுந்து வந்து இஸ்ரவேல் படைகளை நோக்கி, தனிநபர் என்னோடு போர் செய்யட்டும் என்று சவால் விட்டதோடு, இஸ்ரவேலின் தேவ சேனைகளையும் நிந்தித்தான். இதில் ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை விருத்தசேதனம் இல்லாத பெலிஸ்தன் நிந்தித்த வார்த்தைகள் தேவனுடைய பிள்ளையாகிய தாவீதுடைய உள்ளத்தை வீறு கொண்டு எழச் செய்தது. தேவ நாமத்தை அசட்டை செய்தவனை அழிக்கமுடிவு செய்தான். அதனால் அவன் உள்ளத்தில் எழுந்த கேள்விதான் **நான் இங்கு வந்ததற்கு முகாந்தரம் இல்லையா?** என்பதாகும். இது வெறும் கேள்வியாய் மட்டுமல்ல; அதற்கு தாவீதே பதிலாய் நின்றான். **நானே போய் இந்த பெலிஸ் தனோடே யுத்தம் பண்ணுவேன். யுத்தம் கர்த்த ருடையது.** (17:32,47) **அவர் உங்களை எங்கள் கையில் ஒப்புக் கொடுப்பார்** என்று தன்

விசுவாசத்தைத்தை வெளிப்படுத்தினான். தேவபெலன் என்பதால் ஞானத்தால் ஒரே ஒரு கவுண் கல்லால் மாவீரன் கோலியாத்தை நெற்றி அடி அடித்து வீழ்த்தினான். இப்பொழுது அவனால் நிந்திக்கப்பட்ட அதே தேவனின் இஸ்ர வேல் சேனையால் பெலிஸ்தரை துரத்தி வெற்றி பெற்றார்கள். தாவீதுக்குள் எழும்பிய இக்கேள்வி தான்.

அன்றும், இன்றும் என்றும் தேவ பிள்ளைகளின் இதய பீடத்தில் தாவீது அமர்ந்து கொண்டிருக்கிறார்.

கேள்விகளிலேயே மிகச்சிறந்த, நல்ல பலன் கொடுப்பது உங்கள் உள்ளத்தில் எழும் கேள்வியே ஆகும். இன்றைய நாளில் கிறிஸ்து வின் சபையில் அமர்ந்திருக்கும் ஒவ்வொருவருமே இக்கேள்விக்கு விடையாய் நிற்க வேண்டும். தேவையான விடைகளை வேதத்தில் தேடுங்கள்; அல்லது ஊழியரை நாடுங்கள். நான் இங்கு வந்ததற்கு முகாந்திரம் உண்டு என்று விசுவாசத்தில் உறுதியாய் நில்லுங்கள். பிசாசின் கள்ளப்போதகங்களையும், பாவங்களையும் தேவபெலத்தால் வென்றெடுக்கமுடியும். கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றி சிறக்கப்பண்ணி எல்லா இடங்களிலேயும் எங்களைக் கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப் படுத்துகிற தேவனுக்கே ஸ்தோத்திரம் உண்டாவதாக (II கொரி2:14).

நான் வந்ததற்கு முகாந்தரம் இல்லையா? என்ற கேள்வி யாருடைய உள்ளத்தில் தோன்றினாலும் அவர்களால் சாதனைகள் சாதிக்க முடியும். ஒரு பெண் அன்று வேத அந்த நேரத்தில் கிணற்றில் தண்ணிர் எடுக்க வந்ததற்கு ஒரு முகாந்தரம் உண்டு என்பதை யோவான் 4:8-42. முடிய தேவ சரித்திரத்தில் ஆராய்ந்து பார்த்தால் உண்மை விளங்கும். அன்று அவன் அந்த கிணற்றின் அருகே வந்ததால் தான் இரட்சகர் இயேசுவை சந்திக்க முடிந்தது.

அவருடைய வார்த்தையால் தன் தவறான வாழ்க்கையை உணர முடிந்தது. உடனே ஊருக்குள் ஓடிப்போய் நடந்தததை சாட்சியாக சொன்னாள் அந்த ஸ்திரீயின் வார்த்தைகளினிமித்தம் அந்த ஊரிலுள்ள அநேகர் அவர்மேல் விசுவாசமுள்ளவர்களானார்கள். (4:39). ஒரு பாவியான ஸ்தீரீ இயேசுவின் வார்த்தையால் தன்கு கிடைத்த மாற்றத்தைப்போல் ஊரிலுள்ள எல்லோருக்கும் கிடைக்க வேண்டுமென்று எண்ணி எல்லோரையும் இயேசுவிடம் அழைத்து வந்தாள். வேதம் சொல்வதை கவனியுங்கள், **அந்த ஸ்திரீயின்**

**வார்த்தையினிமித்தம் அந்த ஊரிலுள்ள அநேகர் அவர் மேல் விசுவாசமுள்ளவர்களானார்கள்.** (4:39). ஒரு பாவியான ஸ்திரீ செய்த இச்செயலைக் குறித்து நாம் எண்ண நினைக்கிறோம்.

நாம் பிறந்த இப்பிறப்பில்தானே நமக்கு சுவிசேஷம் கிடைத்தது. இரட்சிக்கப்பட்டதைப்போல் நம்மைச் சார்ந்தவர்களும் இரட்சிக்கப் பட வேண்டியது அவசியமாகும். அவர்களையும் சபைக்குள் அழைத்து வருவதே நாம் கிறிஸ்தவர்களாக பிறந்திருப்பதின் நோக்க மாகும். உங்கள் வெளிச்சம் அவர்கள் முன் பிரகாசிக்கக்கடவது (மத் 5:16.)

சில சமயங்களில் நம் வாழ்க்கையில் கூட சில இழப்புகள் துன்பம் தொல்லைகள் நேரிடும். ஆனால் தேவ பிள்ளைகளாகிய நாமோ, பயப்படாமல் கலங்காமல், சோர்ந்து போகாமல், இவைகள் என் வாழ்க்கையில் நடந்ததற்கு ஒரு முகாந்தரம் உண்டு என்று நினைத்தால் அவைகளால் நிச்சயம் ஒரு மேன்மை சமாதானம், விசுவாச உறுதி கிடைக்கும்.

நாம் மனிதனாய் பிறந்ததற்கான முகாந்தரத்தை சரியாய் புரிந்து கொண்டால் தேவனுக்கென்று நம்மைச்சுற்றி ஒரு சரித்திரமே படைக்கமுடியும். நான் என் மகிமைக்கென்று சிருஷ்டித்து உருவாக்கிப்படைத்து, என் நாமந்தரிக்கப்பட்ட யாவரையும் கொண்டு வா என்பேன் **இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன்** (**ஏசா 43:7,21**) இவர்கள் என் துதியைச் சொல்லி வருவார்கள் நாம் நம் செயல்கள் மூலம் தேவனை மகிமைப்படுத்தவேண்டும். தேவனே பிரியப்பட வாழ்ந்த தானியேல் இடைவிடாமல் மூன்று வேளையும் தேவனைத் துதித்து வந்தான். (தானி 9:23,10:11). இப்படிப்பட்ட தானியேல் சிங்கக் கெபியில் போடப்பட்டான். ஆனால், இடை விடாமல் ஆராதிக்கிற தானியேலின் தேவனோ தேவதூதனை அனுப்பி சிங்கங்களின் வாய்களைக் கட்டிப் போட்டார். அதி காலையில் எழுந்து சிங்கக் கெபிக்கருகில் வந்த ராஜா உயிரோடிருக் கிற தானியேலை வெளியே கொண்டு வந்தான். மேலும், என் ராச்சியத்தின் ஆளுகைக்குள் எங்குமுள்ளவர்கள் யாவரும் தானியேலின் தேவனுக்கு முன்பாக நடுங்கிப் பயப்பட வேண்டு மென்றும்... தானியேலை சிங்கங்களின் கைக்குத் தப்புவித்த, அவரே தப்புவிக்கிறவரும், இரட்சிக்கிறவருமாவார். என்று ராஜா அறிவித்தான். தானியேல் சிங்கக் கெபிக்குள் போடப்பட்டதால் அந்த நாடே தேவனை மகிமைப்படுத்தியது. அன்பானவர்களே! நமக்கு வரும் சிறு சிறு துன்பங்களையும், இழப்புகளையும் கண்டு ஒருபோதும் சோர்வடைய வேண்டாம். பவுல் சொல்லுகிறார்,

தாழ்ந்திருக்கவும் எனக்கு தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்கு தெரியும், என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்து வினாலே எல்லா வற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு (பிலி 4:12,13) என்பதை விசுவாசியுங்கள் எனக்கு இக்கட்டுகள் வருவதற்கு முகாந்தரம் உண்டு என்பதை தெளிவாய்ப்புரிந்து கொண்டு தேவனை மகிமைப்படுத்துங்கள். தானியேலின் தேவன் நம்மோடிருக்கிறார்.

நான் இங்கு வந்ததற்கு முகாந்தரம் உண்டு என்பதை தெளிவாய் புரிந்து தேவசித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து வாழ்ந்த இஸ்ரவேல் தேசத்திலிருந்து சீரியா தேசத்துக்கு அடிமையாய் கொண்டு வரப்பட்ட சிறுபெண்ணிடம் காண முடியும். படைத்தளபதி நாகமான் வீட்டில் வேலை செய்துவந்தாள். தன் எஜமான் நாகமான் குஷ்டரோகி என்பதை அறிந்திருந்தாள். கர்த்தரை நோக்கி நன்மை செய் சங் 37:3, என்பதை புரிந்து வைத்திருந்தாள். ஆகவே, நாகம்மாள் குஷ்டம் நீங்க சமாளியாவிலிருக்கிற தீர்க்க தரிசி எலிசாவிடம் போகச் சொன்னாள். நாகமானும் எலிசாவை சந்தித்து யோந்தாளில் ஏழுதரம் மூழ்கி எழுந்தால் குஷ்டம் நீங்கி முழுமையில் சுகம் பெற்றான். சிறுமியின் முயற்சி குஷ்டம் நாகமானின் மனதையும் மாற்றியது. தேவனை தொழுது கொண்டான். இதோ இஸ்ரவேலிலிருக்கிற தேவனைத் தவிர பூமியெங்கும் வேறே தேவன் இல்லை என்று அறிக்கை யிட்டான்..... அடியேன் இனி கர்த்தருக்கே அவ்வாழ்த்து அந்நிய தேவர்களுக்குச் சர்வாங்க தகனத்தையும், பலியையும் செலுத்து வதில்லை என்று அறிக்கையிட்டான். குடும்பமாக தேவனை ஏற்றுக்கொண்டார்கள் 11 இரா5.13,17). இதற்கு அந்த இஸ்ரவேலின் பிள்ளை அடிமையாய் வந்ததே காரணம். ஆகவே, தீமைக்கும் நன்மையே செய்யுங்கள் (சங் 34:14).

கர்த்தருக்குள் பிரியமான அன்பு வாலிபர்களே! பிள்ளைகளே! உங்களைக் கொண்டும் தேவன் மகிமைப்படுவார். உங்கள் வீட்டில், சபையில், ஞாயிறு பள்ளியில் நீங்கள் கற்றுக்கொள்ளும் வேத வசனங்களை வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் பயன் படுத்துங்கள். உங்கள் பக்தி மற்றவர்களுக்கு முன் பிரகாசிக்கட்டும். நிச்சயம் உங்களாலும் சிலர் சபையில் சேர்க்கப்படுவார்கள். நிறைவாக தேவனுடைய பிள்ளைகள் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் **நான் பிறந்ததற்கு முகாந்தரம் உண்டு** என்று விசுவாசியுங்கள். தேவ பெலன் எப்போதும் உங்களோடிருப்பதாக. ஆமென்! ✝

# மனச்சோர்வும், மனமடிவும்

Bro. பாண்டியன்

**ந**ம்மை அழைத்த சமாதானத்தின் தேவன் நாம் மனமகிழ்ச்சியாய் இருக்கவே விரும்புகிறார். ஒரு தகப்பனைப் போல தேவன் நம் தேவைகளை சந்தித்துக் கொண்டு தான் இருக்கிறார். ஆனாலும் இப்பிரபஞ்சத்தின் தேவனாயிருக்கிற பிசாசானவன் நம்மை மகிழ்ச்சியாய் இருக்க விடுவதில்லை என்பதே உண்மை. என்னதான் நம் ஆண்டவர் உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக, விசுவாச மாயிருங்கள் என்று சொல்லியிருந்தாலும், நாம் பல காரணங்களால் மனச்சோர்வுக்கும் மனமடிவுக்கும் உள்ளாகிறோம். அதற்கு நம்முடைய அவிசுவாசமும், தேவனுடைய வார்த்தையை சரியாக தியானிக்காமல் அசட்டை செய்வதுமே காரணமாகும்.

மனமடிவுக்கான சில வேதாகம ஆலோசனைகளை இங்கு பார்க்கலாம். முதலாவது, நம்மில் அன்புக்கூர வேண்டிய உறவுகள் நம்மைப் பகைக்கும் போது மனமடிவு உண்டாக்கலாம். யோசேப்பின் உடன் பிறந்தவர்கள் மூலம் மனமடிவு வந்த போது யோசேப்பு தேவனை உறுதியாகப் பற்றிக் கொண்டதால் தேவன் அவனை இஸ்ரவேலுக்கு மேய்ப்பனாகவும், கன்மலையாகவும் உயர்த்தி எல்லா ஆசீர்வாதங்களினாலும் அவனை நிரப்பினார் என்கிறது வேதம் (ஆதி 49:22-25) நம் ஆண்டவர், ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே என்று சொல்வதை நினைவு கூருங்கள். உங்கள் தேவபக்தி குடும்ப உறவுகளால் பாதிக்கப்படக்கூடும் என்பதே கிறிஸ்துவின் உபதேசம். அதே போல இயேசு என்னை விட தன் குடும்ப உறவுகளை அதிகமாக நேசிப்பவன் எனக்குப் பாத்திரனாக இருக்க முடியாது என்றும் எச்சரித்திருக்கிறார்.

அடுத்ததாக, வேலைச்சுமை நம்மை மனமடிவாக்குகிறது என்று யாத் 6:9 ல் வாசிக்கின்றோம். பார்வோன் தன் ஆளோட்டிகளின் மூலம் இஸ்ரவேல் ஜனங்களைக் கடுமையான வேலை வாங்கிய போது அவர்கள் மனமடிவாகி மோசேக்கு செவிகொடாமற் போனார்கள். நம்முடைய வேலைப்பளு நம் ஆவிக்குரிய வாழ்வை பாதிக்காதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். இன்றைய நாட்களில் வொர்க் – டென்ஷனைக் குறைக்க சிலர் மதுபானம் பெண் சிநேகிதம் போன்றவைகளை நாடிக் கெட்டுப் போகிறதைப் பார்க்கிறோம். வேலைப்பளு பல தவறான பேச்சுக்களை நம் வாயில் வரவழைக் கலாம். இஸ்ரவேலர் மோசே, ஆரோன் போன்ற ஊழியர்களையே

சபித்துப் பேசுமளவு இந்த வேலைப்பளு அவர்களைத் தூண்டியது. குடும்பத்திலும் கணவன் மனைவியிடையே அப்படியான பிரச்சனை வராதபடி நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

ஒன்றை ஞாபகத்தில் வையுங்கள் உலகத்தாரைப் போல நாம் அந்தக் கடவுளுக்கு கண் இல்லையா? என்று புலம்பமுடியாது. காரணம் தேவன் நம் உபத்திரவங்களையும் கூக்குரலையும் பார்க்கிறவராக கேட்கிறவராக மாத்திரமல்ல உதவி செய்ய இறங்கி வருகிற தேவனாயிருக்கிறார் . (யாத் 13:17). இதுவும் தேவன் தம் ஜனத்தின் மேல் வைக்கும் அக்கறையை காண்பிக்கிறது. நாம் அனுபவிக்கும் துன்பங்கள் தேவனுக்குத் தெரியும் என்று உணரும் போது ஒரு பெரிய ஆறுதல் உண்டாகின்றது. மாத்திரமல்ல நம்மை அவர் கவனித்து வழி நடத்துகிறார் என்று அறியும் போது நாம் அவரை மிகவும் ஸ்தோத்தரிக்கக் கடனாளிகளாய் இருக்கிறோம். இதைப்புரிந்து கொள்ளாத இஸ்ரவேலர் வழியினிமித்தம் சோர்ந்து போனார்ரகள் (எண் 21:4)

பொருத்தனை செய்து மனமடிவாகிப்போன யெப்தா நமக்கு ஒரு முக்கிய திருஷ்டாந்தமாகும். நியா 11:35. நம்மில் சிலர் இது கிடைத்தால் தான் தேவனுக்கு இவ்வளவு காணிக்கை செலுத்துவேன் என்று உற்சாகமாக தீர்மானம் செய்கின்றனர். ஆனால் பல நேரங்களில் சொன்னபடி செய்யமுடியாமல் தேவனால் தண்டிக்கப்படுகிறார்கள். இதில் விசுவாசிகள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பொருத்தனை பண்ணா திருந்தால் பாவமில்லை என்கிறது வேதம் உபா 23:22 பொரு த்தனை செய்தபின் யோசிக்கிறது. மனுஷனுக்குக் கண்ணியாய் இருக்கும். நீதி 20:25 செலுத்த தாமதிப்பது முட்டாள் தனம். அதைவிட நேர்ந்து கொள்ளாமலிருப்பதே நலம் பிர. 5:4,5 என்றும் நாம் எச்சரிக்கப்படுகிறோம்.

நம்முடைய தவறான எதிர்பார்ப்புகள் கூட நமக்கு மனமடிவை உண்டாக்குகிறது. பொதுவாக, பிறரிடம் உதவி எதிர்பார்க்கும் போது இது நடக்கும். ஆனால், பவுலைப்போல எனக்கு வாழ்ந்திருக்கவும் தெரியும். தாழ்ந்திருக்கவும் போதிக்கப் பட்டேன் என்ற சிந்தை வரும்போது நாம் மனச் சோர்வுக்கு ஆளாகாமல் தப்பிக்கலாம். நாம் நினைத்ததுதான் நடக்க வேண்டும் என்று யோனாவைப்போல அடம் பிடிக்கக் கூடாது. (யோனா 4:6)

அதேப்போல ஐசுவரியத்தின் மயக்கம் நம்மை நெருங்கவிடக் கூடாது. ஆஸ்தியை ஏழைகளுக்குத் தரச் சொன்னார் இயேசு. அந்த வாலிபன் மனமடிவோடே விலகிச் சென்றதைப் பார்க்கிறோம் [ மாற் 10:22] நாமும் மனந்திரும்பி தேவ ஆசீர்வாததத்திற்கு எதிர்பார்த்ததுக் காத்திருப்போம்.

சில நேரங்களில் பிறர் நம்மைப் பரியாசம், கேலி பண்ணும் போது மனமடிவுக்குள்ளாகிறோம். நெகேமியாவும் அவனைச் சேர்ந்தவர்களும் அலங்கத்தை புதுபித்து கட்ட ஆரம்பித்த போது அது மண் மேடுகளாகப்போகும் என்று ஒரு நரி ஏறிப்போனாலும் இடிந்துப் போகும் என்றும் கேலி செய்து மனமடிவுண்டாக்கினார்கள் [நெகோ 4:5] ஆனால், நெகேமியா அதற்கெல்லாம் பாதிக்கப்படாமல் தன் வேலையில் உறுதியாய் இருந்து வெற்றிக்கண்டார். இயேசுவை போஜனப்பிரியர் என்றும் யோவனை பிசாசு பிடித்தவனென்றும் சொன்ன உலகம் இது. நாம் அதையெல்லாம் புறந்தள்ளி முன்னேற வேண்டும். தேவன் அவர்களுக்குப் பதிற் செய்வார் [2 தீமோ 4:4].

இறுதியாக, நம்மோடிருப்பவர்களே துரோகம் பண்ணும் போது நமக்கு மனமடிவு உண்டாவது நிச்சயம். நெகேமியா காலத்தில் அலங்கம் கட்டிக் கொண்டிருந்தவர்கள் கேலி செய்தவன் தொபியா என்பவன். இவனுக்கு தங்கள் இடத்திலேயே ஒருவன் தங்கும் அறையை வசதி செய்து கொடுத்தான். இது நெகேமியாவுக்கு மனமடிவை உண்டாக்கியது [நெகேமி யாவுக்கு மனமடிவை உண்டாக்கியது [நெகே 13:7,8] நம் வாழ்க்கையிலும் இதைப் போன்ற துரோகங்களை சந்திக்க வேண்டியுள்ளது. ஆனால், நம் எஜமானர் இயேசுவின் உடனிருந்தே காட்டிக் கொடுத்த யூதாசை விடவா நாம் பெரிய துரோகிகளை சந்தித்து விடப் போகிறோம். ஆகவே, இதைப் போன்ற சம்பவங்கள் நம் மனதைப் பாதிக்காதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். நாம் ஆராதிக்கும் தேவன் நம்மை இதைப் போன்ற கலகங்களுக்கு தப்புவிக்கிறவராய் இருக்கிறார். சங் 18:43-46. ஆகவே, கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாய் இருப்போம். அவரே நம் வேண்டுதலை நிறைவேற்றுவார் [சங் 37:4] ஆமென். ✝

## ஒரு மணவாட்டி தன் மணவாளனை மறக்கும் போது...
Glenn Colley

Kim மற்றும் Krickitt தம்பதியினருக்கு திருமணமாகி பத்து மாதங்கள் ஆனது. அவர்கள் ஓரிடத்திற்கு பயணித்துக் கொண்டிருந்த போது பயங்கரமான விபத்து ஏற்பட்டது. அந்த விபத்தில் மனைவியாகிய Krickitt க்கு மிக மோசமான காயம் ஏற்பட்டது. ஆனால், அவள் தன் மனபலத்தாலும், கணவன் Kim ன் உதவியாலும் படிப்படியாக இயல்பு நிலைக்கு திரும்பினாள். இருந்த போதிலும், அங்கே ஒரு பெரிய தடை இருந்தது. விபத்தின் போது அவளுக்கு தலையில் ஏற்பட்ட கடுமையான காயம், அவளுடைய நினைவை இழக்கச் செய்துவிட்டது. அவளுக்கு தன் கணவனைக் குறித்து எந்த நினைவும் இல்லை. அவள் தன் கணவனை தினமும் பார்த்தாலும் கூட எந்த உணர்வும் அவளுக்கு ஏற்படவில்லை. தன் மனைவிக்கு மீண்டும் நினைவைக் கொண்டு வர எடுக்கப்பட்ட எல்லா முயற்சிகளும் தோல்வி அடைந்து தளர்ந்து போய், திருமணத்திற்கு முன்பு தன் மனைவியின் மனதில் இடம் பிடிக்க எடுத்த முயற்சிகள மீண்டும் முயற்சிக்க விரும்பினார். எனவே, தன் மனைவியை வெளியே அழைத்துக் கொண்டு போய் பல இடங்களை சுற்றிக்காட்டி அவளை மகிழ்வித்த போது இப்படி பலமுறை செய்த போது, முழுமையாக இல்லா விட்டாலும் கூட ஓரளவு அவளுடைய நினைவு திரும்பியது அவர்கள் இருவரும் புதிதாக திருமணம் ஆனது போல் உணர்ந்தார்கள்.

புதிய ஏற்பாட்டில் பலமுறை கிறிஸ்துவுடனான ஒரு கிறிஸ்தவனின் உறவு , கணவன் மனைவி இடையேயான திருமணத்துடன் ஒப்பிடப்பட்டிருக்கிறது. எபேசியர் 5 :21–27 வசனங்களில் அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்துவுக்கும், சபைக்கும் இடையே உள்ள உறவை கணவனுக்கும், மனைவிக்கும் உள்ளஉறவாக ஒப்பிட்டுப் பேசியிருந்தார்.

### தேவ பயத்தில் ஒருவருக்கொருவர் கீழ்ப்படியுங்கள்

மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறது போல உங்கள் சொந்தப் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள். கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்: அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிகிறது போல மனைவிகளும் தங்கள் சொந்த புருஷர்களுக்கு எந்த காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்.

புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து தாம் அதை திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத் தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார் (எபேசியர் 5:22–27).

II கொரிந்தியர் 11:2ல் பவுல், நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாக கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புகொடுக்க நியமித்த படியால், உங்களுக்காக தேவ வைராக்கியமான வைராக்கியங் கொண்டிருக்கிறேன் என்று எழுதுகிறார். அடுத்ததாக, ஆவிக்குரிய விபசாரத்திற்கு அச்சுறுத்தலாக இருப்பது பாவமான இந்த உலகம் தான். விபசாரரே விபசாரிகளே, உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்ககளா? ஆகையால், உலகத்துக்கு சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான் (யாக்கோபு 4:4).

மத்தேயு 22 ஆம் அதிகாரத்தில் கிறிஸ்தவர்கள் ராஜாவினுடைய குமாரனின் விவாகத்தில் விருந்தாளிகளாக ஒப்பிடப்பட்டிருக்கிறார்கள். இயேசு மறுபடியும் அவர்களோடே உவமைகளாய் பேசிச் சொன்னது என்னவென்றால். பரலோக ராஜ்யம் தன் குமாரனுக்குக் கலியாணஞ் செய்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது. அழைக்கப்பட்டவர்களைக் கலியாணத்திற்கு வரச்சொல்லும்படி அவன் தன் ஊழியக்காரரை அனுப்பினான்; அவர்களோ வர மனதில்லாதிருந்தார்கள், அந்த ஊழியக்காரர் புறப்பட்டு வழிகளிலே போய், தாங்கள் கண்ட நல்லார் பொல்லார் யாவரையும் கூட்டிக் கொண்டு வந்தார்கள். கலியாணசாலை விருந்தாளிகளால் நிறைந்தது (மத்தேயு 22:1–3,10)

மத்தேயு 25 ஆம் அதிகாரத்தில் கிறிஸ்தவர்கள் மணவாளனை சந்திக்க புறப்பட்டுச் சென்ற பத்துக் கன்னிகைகளோடு ஒப்பிடப்படுகிறார். மணவாளன் வரும் போது சிலர் ஆயத்தமாக இருந்தார்கள். சிலர் ஆயத்தமாக இல்லை. அப்பொழுது, பரலோகராஜ்யம் தங்கள் தீவட்டிகளை பிடித்துக் கொண்டு மணவாளனுக்கு எதிர் கொண்டு போகப் புறப்பட்ட பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும். அவர்களில் ஐந்து பேர் புத்தியுள்ளவர்களும், ஐந்து பேர் புத்தியில்லாதவர்களுமாயிருந்தார்கள். புத்தியில்லாதவர்கள் தங்கள் தீவட்டிகளை

பிடித்துக் கொள்வது என்பது கிறிஸ்தவர்களாயிருப்பதை அடையாளப்படுத்துகிறது. இங்கே எண்ணெய் என்பது நற்கிரியைகளுடனும், விசுவாசத்துடனும் கிறிஸ்துவுக்கு உண்மையாக வாழ்வதை அடையாளப்படுத்துகிறது. இப்போது நாம் மறுபடியும் Kim மற்றும் Kricktt தம்பதியினருடைய சம்பவத்திற்கு வருவோம். இங்கே Kricktt விபத்தின் விளைவாக தன் கணவனை மறந்து போகிறாள். கணவன் மறுபடியும் மனைவியை தன்வசப்படுத்த பல முயற்சிகளை எடுக்கிறார். கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபை தன் மணவாளனாகிய கிறிஸ்துவை மறக்கும் போது நம் கர்த்தர் சபை தம்மிடம் திரும்புவதற்கு பல முயற்சிகளை எடுத்துரைத்தார். கிறிஸ்துவால் பாவ மன்னிப்பின் கரம் நீட்டப்படுகிறது. தம்மிடம் திரும்பி வருபவர்களை மணவாளன் மனமாற அணைத்துக்கொள்கிறார்.

ஆனால், மணவாட்டியாகிய சபை மணவாளனாகிய கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து சென்றால் எப்படியிருக்கும்? ஒரு வேளை, மணவாட்டியாகிய சபை கிறிஸ்துவுடனான இனியத்திருமண உறவை முறித்துக் கொண்டால் எப்படியிருக்கும்? அப்போது மணவாளன் திரும்பி வரவேமாட்டார், ஏனென்றால், மணவாளனால் மணவாட்டியை ஒன்றுமே செய்ய முடியாது (எபிரெயர் 6:47).

கிறிஸ்துவைப் விடடுப் பிரிந்து சென்ற ஆவிக்குரிய மணவாட்டியாக நீங்கள் இருக்கீறீர்களா? நீங்கள் முன்பு அவருடைய சரீரத்தின் உண்மையுள்ள அங்கமாகயிருந்து. சரியான வாழ்க்கையிலிருந்து இப்போது விழுந்து விட்டீர்களா? அதன் பின்பு நம்பிக்கை உண்டா இல்லையா என்பதை தீர்மானித்து நீங்களே சில கேள்விகளை கேட்டுக் கொள்ளுங்கள்: தேவனுடைய வீட்டில் மற்ற கிறிஸ்தவர்களுடைய இனிமையான உறவு எப்படி? பரலோகத்தில் நித்தியத்தைக் கழிப்பது குறித்து கனவு காணும் உரிமையைப் பற்றி எப்படி இக்கேள்விக்களுக்கான பதில் நல்லதென்றால், இந்தக் காரியங்கள் உங்களுக்குப் பிரியமாக இருந்தால் கிறிஸ்துவினிடத்தில் மறுபடியும் திரும்பி வருவதற்கான முயற்சிகளை துரிதமாக எடுங்கள். உங்கள் பாவங்களுக்கான மன்னிப்புக்காக ஜெபியுங்கள். அருகில் உள்ள கர்த்தருடைய சபைக்கு விரைந்து சென்று நீங்கள் மனந்திரும்பிவிட்டீர்கள் மீட்கப்பட விரும்புகிறீர்கள் என்பதை அவர்களுக்கு தெரியப்படுத்துங்கள். நீங்கள் ஒரு காலத்தில் அவருடைய மணவாட்டியாகிய சபையில் அங்கம் வகித்தீர்கள். நீங்கள் மறுபடியும் அவரிடத்தில் திரும்ப வேண்டுமென்று அவர் விரும்புகிறார். ✝

# வாழ்க்கையின் சாராம்சம் கொடுத்தலே

*Stephen D. Eckstein Jr*

**மே**ற்சொல்லப்பட்ட தலைப்பு நம்மை ஆச்சரியப் படுத்தலாம். ஆனால், அதன் ஆதாரம் அலாதியானது. தேவன் தாமே, தம்மைப் பற்றிய இந்தச் சத்தியத்தை மூன்று விதங்களில் வெளிப்படுத்தி இருக்கிறார். அவை, 1. கடந்தகால ஈவுகள் 2. நிகழ்கால ஈவுகள் 3. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஈவுகள்.

**கடந்த கால ஈவு**

வேதாகமம் முழுவதும், தேவனுடைய வாக்குத் தத்தங் களினாலும், அதன் நிறைவேறுதல்களினாலும் நிறைந்து காணப்படுகிறது. தேவன் ஆதிப் பெற்றோருக்கும், அவர்களுடைய சந்ததியாருக்கும் ஜீவனையும், அதற்கான ஆதாரத்தையும் கொடுத்தார். நோவாவுக்கு பேழையைக் கட்டுவதற்கான மாதிரியையும் அதற்கான திறனையும் கொடுத்தார். மேலும், அவர் நோவாவுக்கும், அவனுக்குப் பின்வரும் சந்ததிக்காகவும் வான வில்லை உடன்படிக்கையாக உண்டாக்கினார். இதினிமித்தம் நிகழ் காலத்தில் வாழும் நாமும் நன்மை பெற்றிருக்கிறோம் கடந்த காலத்தில் வாழ்ந்தவர்களைப் போலவே. ஆகையால், உலகம் உள்ளவரைக்கும் இந்த கடந்த கால ஈவினால் நாம் நன்மை பெறுகிறோம். தேவன் இஸ்ரவேலர்களுக்கு எரிகோவைத் தருவதாக வாக்குத்தத்தம் பண்ணினார். அதை அவர்களுக்கு நாற்பது வருடங்களுக்குப் பிறகு யோசுவாவின் மூலமாக கொடுத்தார்.

மேலும், தேவனுடைய மாபெரும் ஈவுகளில் மகத்தான ஈவு மேசியாவைப் பற்றியதுதான். அவருடைய வருகை பற்றி பரிசுத்தப் பதிவுகளில் பல்வேறுபட்ட காலகட்டங்களில், பரிசுத்த தேவனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டது. அவர் வாக்குத்தத்தம் செய்தபடியே காலம் நிறைவேறினபோது, இவ்வுலகத்திற்கு வந்து மனித இனத்தை இரட்சிப்பினால் அலங்கரித்தார். ஆம், அவருடைய போதனையை தங்களுக்குள் அனுமதித்து, மாற்றத்தைக் கண்ட எல்லோருடைய வாழ்க்கையையும் அவர் வளப்படுத்தியிருக்கிறார். அதிலும், பிரதானமாக வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்ற ஏற்றமிகு எண்ணத்தை அவரைப் பின்பற் றுகிறவர்களுடைய வாழ்க்கையில் ஏற்படுத்தியிருப்பது இன்னும் அலாதியான இன்பமாயிருக்கிறது என்றால் அது மிகையல்ல!

**நிகழ்கால ஈவு**

நம்முடைய நாட்களில் நாம் எண்ணிப்பார்க்க முடியாத ஆசீர்வாதங்களைத் தேவன் நமக்குத் தொடர்ந்து கொடுத்துக் கொண்டிருக்கிறார். தேவன், நம்முடைய பாவங்களைக் கழுவிச் சுத்திகரிக்கும் வல்லமையை இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் நமக்குக் கொடுத்திருக்கிறார்.

தேவன், தம்மை நோக்கி உண்மையான விசுவாசத்தோடு வேண்டுதல் செய்கிறவர்களுக்குத் தொடர்ந்து பலன் அளித்துக் கொண்டுதான் இருக்கிறார். அப்போஸ்தலனாகிய பவுல் ரோமர் 8:32-ல், தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர் அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி? என்று வினவுகிறார். இக்கேள்விக்கான பதில், ஆம் என்பதாகும். ஏனென்றால், தேவன் பரலோகத்தின் அரும்பெரும் விலையேறப்பெற்ற பொக்கிஷமாகிய இயேசு கிறிஸ்துவையே நமக்காகத் தந்திருக்கும் போது, அவருடைய நித்திய அன்பினால் மற்ற எல்லாவற்றையும் நமக்குத் தருவது என்பது அவருக்கு இலேசான காரியமாகும்.

**வருங்கால ஈவு**

தேவன் எல்லாக் காலங்களிலும் பொய்யுரையாதவராகத்தான் இருக்கிறார். ஆகவே, அவர் பொய் பேசமாட்டார். அந்தப்படி தேவனும் வாக்குத்தத்தம் பண்ணைப்பட்டவைகளைச் சுதந்தரித்துக் கொள்கிறவர் களுக்குத் தமது ஆலோசனையின் மாறாத நிச்சயத்தைப் பரி பூரணமாய்க் காண்பிக்கும்படி சித்தமுள்ளவராய், ஓர் ஆணையினாலே அதை ஸ்திரப்படுத்தினார். நமக்கு முன் வைக்கப் பட்ட நம்பிக்கையைப் பற்றிக் கொள்ளும்படி அடைக்கலமாய் ஓடிவந்த நமக்கு இரண்டு மாறாத விசேஷங்களினால் நிறைந்த ஆறுதலுண்டாகுபடிக்கு எவ்வள வேனும் பொய்யுரையாத தேவன் அப்படிச் செய்தார் (எபி.6:17,18). இதினிமித்தம், தேவன் வருங்காலத்தில் நிறைவேற்றுவதாகச் சொல்லியிருக்கும் வாக்குத்தத்தங்களை நம்மால் முழுமையாக நம்ப முடியும் என்பது நிச்சயம்.

தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினுடைய வருகையின்போது, தம்முடைய பிள்ளைகளுக்குப் பரலோகத்தில் நித்திய ஜீவனை அளிக்க வல்லமையும், ஜீவனுமுள்ளவராயிருக் கிறார் (I யோவான் 3:1-3). மேலும், அவர் நமக்கு கிறிஸ்துவினுடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பான ஆவிக்குரிய சரீரத்தைத் தருவார் (பிலி.3:20,21). வெளிப்படுத்தின விசேஷத்தில் வெளிப்படுத்தப் பட்டுள்ள வாக்குத்தத்தங்களை ஜெயங்கொள்ளு

கிறவர்களுக்கு நிச்சயம் கொடுப்பார். மீட்கப்பட்டவர்கள் தம்மோடு இருப்பதற்கான பரிபூரண ஆசீர்வாதத்தின் ஐக்கியத்தையும் கொடுப்பார். இன்னுமாக, அவர் பரலோகத்தில் நாம் எப்பொழுதும் அவரைத் துதிக்கும்படியான சிலாக்கியத்தையும் கொடுப்பார். என்னே! ஓர் அனுகூலமான ஈவு!

**பயன்பாடு**


பிரியமானவர்களே! தேவன் நமக்காகக் கொடுத்தார். இன்றும் கொடுத்துக் கொண்டிருக்கிறார். இனிமேலும் கொடுப்பேன் என்று வாக்குத்தத்தமும் செய்திருக்கிறார்.


நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந் துண்டாகி ஜோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது. அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலு மில்லை [யாக்கோபு 1:7]. நாமும் அவருடைய பிள்ளைகளாக இருக்கிறபடியால் கொடுக்கிறவர்களாக இருப்போம்.

மேலும், நாம் மற்றவர்களுக்கு உயிர்ப்பிக்கும் உற்சாகமான வார்த்தைகளை அவர்களின் ஆத்தும மகிழ்ச்சிக்காகவும், வளர்ச்சிக் காகவும் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்யும்பொழுது நாம் உண் மையாகவே அவர்கள் மீது அக்கறை காட்டுகிறோம் என்பது அவர்க ளுக்குப் புலப்படும். இன்னும் அவர்களோடு நெருக்கமாக, வண்ண வண்ண வாழ்த்து அட்டைகளையும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கும் வேதாகமத்தையும் வாங்கிப் பரிசளிப்பதின் மூலமாகவும் நம் மகிழ்ச்சியை அவர்களிடத்தில் வெளிப்படுத்தலாம். காரணம் நம்மிடம் உள்ள பணம் நம்முடையதல்ல. மாறாக, அது தேவனிடத்திலிருந்து நாம் பெற்றுக் கொண்டதாகும். அதின் மூலமாக நாம் மற்றவர்களை மகிழ்விக்கும் போது, உற்சாகம் தானாக வந்து வல்லமையின் வார்த்தைகளைக் கேட்டு ஆன்மீக வாழ்வில் வளம்பெறும்படியான ஆசீர்வாதம் அவர்களுக்குக் கிடைக்கும். இப்படி மனப்பூர்வமாய்க் கொடுக்கும் திராணி உண்டாவதற்கு நான் எம்மாத்திரம்? எல்லாம் உம்மால் உண்டானது; உமது கரத்திலே வாங்கி உமக்குக் கொடுத்தோம் [I நாளா.29:14].

மேலும், உங்கள் பெலனையும், ஆற்றலையும் தேவனுக்குக் கொடுங்கள். அதாவது, சரீரப் பிரகாரமாக, உணர்வுப்பூர்வமாக, ஆவிக்குரிய பிரகாரமாக, பொருளாதார ரீதியாகக் கொடுங்கள். இவையெல்லாவற்றிலும் முதன்மையாக உங்கள் இருதயத்தில் தேவனுக்கு முதலிடம் கொடுங்கள். ஏனெனில், அவர் நமக்குக் கொடுக்கிறார் என்பதை நினைவில் நிறுத்தினவர்களாய் அவருக்காக கொடுப்போம்! ஆத்தும அறுவடை செய்வோம்! ✝


## 12 வித்தியாசமான தலைப்புகளில் கைப்பிரதிகள் கிடைக்கும். தேவைக்கு எங்களைத் தொடர்பு கொள்ளவும்.



















# World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin On Tamilan TV
Every Saturday 7:00 - 7:30 am

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Friday 7:30 - 8.00 am

Arjunan on Nambikkai TV
TV : On Monday & Saturday 7.30 - 7.45 pm


Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam :
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

Philemon & Kingsley on Tamilan TV and Nambikai TV :
Every Sunday 6:45 - 7:00 am
Every Friday 6.00 - 6.30 am
Joy TV - Saturdays 9.00 pm Salvation TV - Every Sunday 2.00 pm

Joshua & Ricky Gootam In Telugu:
Every Saturday at 6:00 pm Subhavartha Channel
Every Wednesday at 6:30 pm on Rakshana Channel
Every Thursday at 11:00 am on Rakshana Channel
Satyavani T.V. online : www.sakthitv.in
Every Wednesday & Friday at 8.00 pm

For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625016
9244204420 / 21, 0452 - 2607026




Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2021 - 2023
Posted at Erode HPO on 20/21 of Every Month.
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2021 - 2023**
Published on 17/18 th of Every Month


# எங்களது இதர வெளியீடுகள்




















சர்வதேச தரத்தில், தலை சிறந்த பிரசங்கிகளால் எழுதப்பட்ட **சத்தியத்தின் குரல்** என்ற நூல் வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்

தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்

## திருமறை தியானம்

நம்பிக்கை தொலைக்காட்சியில்
வெள்ளி காலை 7:30 - 8.00 மணி

தமிழன் தொலைக்காட்சியில்
சனி காலை 7.00 - 7.30 மணி

## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட **100** பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638–701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.